# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 92 மாசி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162








# வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் தஞ்சமடைந்துள்ள இடமே தையிட்டி

இலங்கை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ‘எதிரொலி’க்குப் பேட்டி












ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.



SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# மாவை சேனாதிராஜாவின் வரலாற்றுப் பயணம்

● **சிவபாக்கியராஜா**

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஓராண்டுக்குள் தன்னுடைய மூத்த தலைவர்கள் இருவரை இழந்துள்ளது. இராஜவரோதயம் சம்பந்தன் 2024 ஜூனில் மரணித்தார். சம்பந்தனை விட 10 வயது குறைவான மாவை சேனாதிராஜா 2025 ஜனவரியில் இறந்திருக்கிறார். இருவருடைய மரண நிகழ்வுகளையும் கட்சி சீராக நடத்த முடியாத அளவுக்கு உள் முரண்பாடுகள் வலுத்திருக்கின்றன. சம்பந்தனின் இறுதி நிகழ்வில் நினைவுரையாற்றுவதற்குச் சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வில் சிலர் கலந்து கொள்ள முடியாத அளவுக்கு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன. சிதை எரியூட்டப்படும் மயானத்திற்கூட சிலரை எதிர்க்கும் அநாமதேய அறிவிப்புகள் காட்சிப் படுத்தப்பட்டன. இது கட்சிக்கு ஏற்பட்டுள்ள சரிவும் துயரமுமேயாகும்.

75 ஆண்டுகால அரசியல் வரலாற்றைக் கொண்ட தமிழரசுக் கட்சியில் சம்பந்தனும் சேனாதிராஜாவும் 60 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் பங்கேற்பைக் கொண்டவர்கள். பின்னாளில் இருவரும் தலைமைப்பொறுப்பில் இருந்தவர்கள். அதிலும் ஏனைய தலைவர்களை விட மிக அதிகமான காலம் தலைமைப் பொறுப்பிலிருந்தவர் சேனாதிராஜா. ஏறக்குறைய 10 ஆண்டுகள். இருந்தாலும் இதற்கான பெறுமதியை - மதிப்பை - கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் தொண்டர்களும் அளிக்கத் தவறியுள்ளனர். கட்சியைக் கட்டுப்படுத்தி, ஒழுங்காக்கி, ஆளுமை செலுத்தக் கூடிய தலைவர்கள் அடுத்த கட்டத்தில் இல்லை என்பதற்கான அடையாளமே இதுவாகும்.





இதற்குக் காரணம், இருவரும் தங்களுடைய தலைமைத்துவக் காலத்தில் விட்ட அரசியற் தவறுகளே. அந்தத் தவறுகளே அவர்களுடைய மரண நிகழ்வுகளிலும் பிரதிபலித்தன. இது இப்போதைக்கு முடிவடையாமல் மேலும் தொடரக் கூடிய சாத்தியங்களே அதிகமாக உண்டு.

60 ஆண்டுகளுக்கு மேலான அரசியல் வரலாற்றைக் கொண்ட மாவை சேனாதிராஜா (சோமசுந்தரம் சேனாதிராஜா) 1942 ஒக்டோபர் 27 இல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாவிட்டபுரத்திற் பிறந்தவர். மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர் என்பதால் ‘மாவை‘ என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்டார். மாவிட்டபுரத்திலுள்ள வீமன்காமம் பாடசாலையிலும், காங்கேசன்துறை - நடேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்ற பின்னர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டம் பெற்றார்.

சேனாதிராஜா இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, 1961 இல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றினார். 1962 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்தார். 1966 முதல் 1969 வரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

1969 முதல் 1983 வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் ஏழு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்த சேனாதிராஜா, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது அவருக்கு மிகப் பெரிய வரவேற்பளிக்கப்பட்டது. இது மாவை சேனாதிராஜாவை அன்றைய இளைஞர்களிடத்திலே சிறை சென்ற போராளி, சிறை மீண்ட செம்மல் என்ற அளவுக்குப் பிரபலமாக்கியது. அப்போது ஒரு முன்னணிப் போராட்டக்காரராக சேனாதிராஜா கருதப்பட்டார்.

1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டார் சேனாதிராஜா. தமிழ் இளைஞர் பேரவைக்கு எதிராக தமிழ் மாணவர் பேரவை தீவிரப் போக்குடைய இளைஞர்களால் உருவாக்கப்பட்டது. தமிழ் இளைஞர் பேரவையோ தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நெருக்கமாக இருந்தது, பின்னாளில் கூட்டணியோடு கரைந்தது. தமிழ் மாணவர் பேரவை இந்தப் போக்கிலிருந்து விலகி, ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் குதித்தது. இது இளைஞர்களிடையே சேனாதிராஜாவுக்கு இருந்த ஆதரவைக் குறைத்தது. பின்னாளில் சேனாதிராஜா பாரம்பரிய அரசியல்வாதியாகச் சரிவடைவதற்கான தொடக்கமாகியது.

1980 களின் தொடக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் அரசியலிலிருந்து தூர வைக்கப்பட்டபோது அதனோடு இணைந்திருந்த சேனாதிராஜாவும் தூரத்திலேயே இருந்தார். குறிப்பாக 1980 - 1989 வரை சென்னையில் நீண்டகாலம் அஞ்ஞாதவாசம் புரிந்தார்.

1989 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.என்.டி.எல்.எஃப், ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, த.வி.கூ கூட்டணி சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டார். ஆனாலும் அவரால் வெற்றியீட்ட முடியவில்லை. ஆனாலும், கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989.07.13 இல் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அமிர்தலிங்கத்தின் இடத்திற்கு சேனாதிராஜா தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1999.07. 29 இல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றார் சேனாதிராஜா. இது விடுதலைப்புலிகளுக்கு எதிரான அணியில் மாவை சேனாதிராஜா உள்ளார் என்பதற்கான அடையாளமாகியது.

2000-ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி (த.வி.கூ.) வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2001 ஒக்டோபர் 20 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தவிகூ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ததேகூ) என்ற கூட்டமைப்பை நிறுவின. அப்போது நிலவிய அரசியற் சூழலில் இதற்கு விடுதலைப் புலிகளின் அங்கீகாரமும் கிடைத்தது. இதற்கு முன் விடுதலைப்புலிகளுக்கு எதிர்முனையிலிருந்த சேனாதிராஜா தரப்பினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தோடு புலிகளுக்கு நெருக்கமாகினர்.

2001 இல் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார் சேனாதிராஜா. தொடர்ந்து 2004, 2010, 2015 ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2020 இல் நடந்த தேர்தலில் தோல்வியடைந்தார். அதற்குப் பிறகு அவர் எந்தத் தேர்தலிலும் வெற்றியடையக் கூடிய சூழல் இல்லாது போய் விட்டது. அதற்கு முன், 2013 இல் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராகும் முயற்சியிலும் மாவைக்குத் தோல்வியே கிட்டியது. அந்த வாய்ப்பைச் சம்பந்தன், கொழும்பு மையத்தில் செயற்பட்டு வந்த சி.வி. விக்கினேஸ்வரனுக்கு வழங்கினார். இதனையிட்ட கவலை சேனாதிராஜாவுக்கு இருந்தது. ஆனாலும் அவரால் சம்பந்தனை மீறி எதனையும் செய்ய முடியவில்லை.

இதற்குப் பிரதியுபகாரம் செய்வதைப்போல 2014 செப்ரெம்பரில் சேனாதிராஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து 10 ஆண்டுகளாக சேனாதிராஜாவே கட்சியின் தலைவராக நீடித்தார். அவருடைய தலைமைத்துவத்தில் குழப்பங்கள் உருவாகத் தொடங்கின. இதற்கு இரண்டு காரணங்கள் முக்கியமானவையாக இருந்தன. ஒன்று, சேனாதிராஜா எப்போதும் உணர்ச்சிகரமான தீவிர அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் இயல்பையும் அந்த வழிமுறையையும் கொண்டவராக இருந்தார். ஆனால் இதற்கு எதிர்த்திசையில் - மென்னிலையில் - கட்சியின் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் இருந்தன.

காரணம்,கட்சியின் தலைவராக மாவை இருந்தாலும் நடைமுறையில் அதனுடைய கட்டுப்பாட்டைச் சம்பந்தனே கொண்டிருந்தார். சம்பந்தனின் மறைவுக்குப் பிறகு அந்தச் செல்வாக்கைச் சுமந்திரன் கைப்பற்றியிருந்தார். இதனால் சேனாதிராஜாவினால் அதை மீறி, தன்னடையாளத்தோடு எதையும் செய்ய முடியவில்லை. சேனாதிராஜாவின் அரசியல் வழிமுறையை ஆதரிப்போர் (சிறிநேசன், சிவமோகன், சிறிதரன், குகதாசன் போன்றோர்) அவருடன் அணி திரண்டாலும் மாவையின் தரப்பு அதில் வெற்றியைப் பெற முடியாமற் போய் விட்டது. இது சேனாதிராஜாவின் ஆளுமைக் குறைபாடாக அரசியல் நோக்கர்களால் விமர்சிக்கப்பட்டது.

இரண்டாவது காரணம், சேனாதிராஜா தன்னுடைய அரசியல் வாரிசாகத் தன்னுடைய மகன் கலையமுதனை முன்னிறுத்த முற்பட்டமையாகும். இதனோடு இணைந்ததாக கலையமுதனின் மனைவியினுடைய தாயாரும் மறைந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிராஜின் மனைவியுமான சசிகலாவை முன்னிலைப்படுத்த விளைந்தமையையும் சேர்த்துக் கொள்ளலாம். இதெல்லாம் சேனாதிராஜாவுக்கு எதிரான அலையை மேலும் அதிகமாக்கியது. பின்னாளில் தலைமைப் பொறுப்பில் சேனாதிராஜா நீடிக்க முடியாது என்ற கட்டத்தை உண்டாக்கியது. இதற்கு மாற்றாகப் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்குக் கட்சி முற்பட்டது. அதற்காக மேற்கொள்ளப்பட்ட தெரிவு (சிறிதரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது) தவறு என வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு நிலைமை மேலும் சிக்கலடைந்தது. இதையெல்லாம் கையாள முடியாத நெருக்கடிக்குள் - ஆளுமைச் சிக்கலுக்குள் மாவை மாட்டிக் கொண்டு திண்டாடினார். தொடர்ந்து 2024 இல் ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் ஒன்றாகவும் சேனாதிராஜாவின் நடவடிக்கைகள் ஒன்றாகவும் மாறிக் குழப்பம் மேலும் வலுத்தது. கட்சியின் கீழ் மட்டத் தொண்டர்கள் கூடத் தலைவரைப் பகிரங்க வெளியில் விமர்சிக்கும் நிலை ஏற்பட்டது. . கட்சிக்குள் நிலவிய - நீடித்த முரண்பாடுகளும் குழப்பங்களும் சேனாதிராஜாவின் தலைமைத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கியது. விளைவாக 2024 ஒக்டோபர் 7 அன்று தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து சேனாதிராஜா விலக வேண்டியேற்பட்டது.

அதற்குப் பின்னர் சேனாதிராஜாவின் முக்கியத்துவம் தமிழரசுக் கட்சியிலும் தமிழரின் அரசியலிலும் இல்லை என்ற நிலைக்குள்ளாகியபோது, உள நெருக்கடிக்குள்ளானார் சேனாதிராஜா என்று அவருக்கு நெருங்கியவர்கள் கூறுகின்றனர். அதுவே அவருடைய மரணத்துக்குக் காரணம் என்றும் அவர்கள் சொல்கின்றனர். எப்படியோ, ஒரு மூத்த அரசியல் தலைவராக, தமிழர்களுடைய உரிமைக்கான இனவிடுதலை என்ற அடையாளத்தை முன்னிறுத்திய அரசியற் போராட்டத்தின் தொடக்க கால வரலாற்றைக் கொண்ட முன்னோடியாக இருந்தவர் சேனாதிராஜா. இதற்காக அவர் ஏழு ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார். ஏறக்குறைய 10 ஆண்டுகள் அரசியல் தஞ்சமடைந்து இந்தியாவில் இருந்திருக்கிறார். பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறார். அதேவேளை அவரொத்த ஏனையோரை விட (காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், கோவை மகேசன், இறைகுமாரன், உமைகுமாரன், வாசுதேவா, பரமதேவா, முத்துக்குமாரசாமி போன்றவர்கள்) சேனாதிராஜா பின்னாளில் பெருவாய்ப்பைக் கொண்டவராகினார். ஐந்து தடவை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டி ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கும் மேலாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். நீடித்த ஆயுளோடும் நீடித்த தலைமைப் பதவியோடும் தன் வாழ்நாளைக் கழித்திருக்கிறார். ஒரு மூத்த தலைவருக்குரிய முன்மாதிரிகளை சேனாதிராஜா உருவாக்காது விட்டாலும் அவருக்கு மக்களும் சக அரசியற் தரப்பினரும் மதிப்பு மிக்க அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர். குறிப்பாக அவருடைய கட்சி அவருக்கு வழங்கிய மதிப்பை - மரியாதையை விடவும் மதிப்பான இடத்தைச் சமூகம் வழங்கியுள்ளது. இதுவும் அரசியல் வரலாற்றுக்கு ஒரு படிப்பினையே ஆகும்.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல்:08 அதிர்வு: 92 மாசி 2025 தொ.பே:1800 960 162

# கோமாளிகளை துடைத்தெறிவோம்!

குரங்குக்கு 'கோட்சூட்' அணிவித்து, மாட மாளிகையில் தங்கவைத்தாலும்கூட, மரம்விட்டு மரம்தாவி வாழ்வதில்தான் அதற்கு ஆத்ம திருப்தி கிட்டும். ஏனெனில் அதன் பிறவிக்குணம் அப்படி. எனவே, குரங்கை வைக்க வேண்டிய இடத்தில் வைத்தால்தான் எல்லோருக்கும் சௌக்கியம்.

அதேபோல குரங்குக்கு பூமாலை கொடுத்தால்கூட, அதனை அழகுபார்க்காது, அந்த மாலையை அலங்கோல மாக்கிவிடும். ஏனெனில் அதற்கு பகுத்தறியும் தன்மை கிடையாது.

இப்படியான குணவியல்புகளைக்கொண்ட குரங்கிடம் ஏதேனும் ஆயுதம் வழங்கினால் அது ஆபத்தில்தான் முடியும்.

இதுபோல்தான் பொதுத்தேர்தலில் மக்கள் தமக்கு பேராதரவு வழங்கி நாடாளுமன்றம் அனுப்பி வைத்திருந் தாலும், மக்கள் ஆணையை சரிவர பயன்படுத்தாது, குரங்கு சேட்டை காட்டுவதுபோல் செயல்பட்டுவருகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றம் செல்லும் எம்.பிக்கென தனி மதிப்பு இருந்தது. அவர்கள் கொள்கை வழி அரசியலை முன்னெடுத்திருந் தார்களேதவிர யாழ். மண்ணுக்குரிய மாண்பை நகைப்புக் குள்ளாக்கவில்லை. ஆனால் கொள்கை துறந்து கோமாளி அரசியல் முன்னெடுக்கும் இந்த அர்ச்சுனாவால் யாழ். மண்ணுக்குரிய மாண்பும், மரியாதையும் கேலிக்கூத்தாகி யுள்ளது.

அவர் தன்னை பிரபல்யப்படுத்திக்கொள்வதற்காக குறுக்குவழி அரசியலை முன்னெடுக்க முற்படுவதாலேயே இப்படியான வார்த்தைப் பிரயோகங்களை கையாளவேண்டி யேற்படுகின்றது. அர்ச்சுனா சாதாரண மனிதர் அல்ல, அவர் மக்கள் பிரதிநிதி. எனவே, மக்கள் வழங்கிய ஆணையை அவர் தவறாக பயன்படுத்த முயலும்போது, அதனை சுட்டிக்காட்டும் உரிமை சமூகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்களுக்கு உள்ளது என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

போர் மௌனிக்கப்பட்ட பின்னர் ஒற்றுமை என்பதே தமிழர்களுக்கு பலம்பொருந்திய இறுதி ஆயுதமாகவுள்ளது. அந்த ஒற்றுமையை சிதைப்பதற்கு பேரினவாத சக்திகள் பல வியூகங்களை வகுத்து கடந்தகாலங்களில் செயற்பட்டன. அதுமட்டுமல்ல தெற்கு அரசுகளும் பிரித்தாளும் சூழ்ச்சி யைக் கையாண்டன. இதனால் இன்று தமிழ்க் கட்சிகள் பல அணிகளாக பிரிந்து, பலமிழந்து நிற்கின்றன. அதனை மேலும் சீர்குலைப்பதற்குரிய ஒப்பந்தத்தை நிறைவேற்றும் கைக்கூலியாக அர்ச்சுனா செயற்படுகின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது.

மலையகத் தமிழர்களுக்கும், ஈழ மண்ணுக்கும் இடை யில் அன்று முதல் இன்றுவரை நல்லுறவு இருந்துவருகின்றது. ஈழ விடுதலைப் போராட்டத்தில்கூட அம்மக்களின் பங்களிப்பு மகத்தானது. இலங்கையில் இலவசக்கல்விமூலம் வடக்குத் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றனர் எனில் அதற்கு இலங்கைப் பொருளாதாரத்துக்கு மலையகத் தமிழர்கள் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. புலிகள் காலத்தில்கூட மலையகத் தமிழர்களையும் அரவணைத்து பயணிக்கும் அணுகுமுறையே இருந்தது.

ஆனால், தான் தேசிய தலைவரின் வழியில் பயணிப்பவன் என மார்தட்டிக்கொள்ளும் அர்ச்சுனா, பிரதேசவாதம் பேச முற்படுவதில் இருந்தே அவரின் கொள்கை என்ன, கோட்பாடு என்னவென்பது தெளிவாகின்றது. இரவில் ஒன்றையும், பகலில் வேறொன்றையும் பேசும் கோமாளிகளெல்லாம் தமிழ் இனத்தின் தலைவராகிவிடமுடியாது என்பதை தெளிவாக கூறிவைக்க விரும்புகின்றோம்.

கோட்சூட் அணிவதால் மரியாதை கிடைக்கப்போவ தில்லை, செயலைப் பொறுத்தே மரியாதை என்பதை அர்ச்சுனா புரிந்துகொள்ள வேண்டும். தன்மீது நம்பிக்கை வைத்து மக்கள் வழங்கிய ஆணையைத் தொடர்ந்தும் தவறாக பயன்படுத்த விளைந்தால், தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து அர்ச்சுனா நிச்சயம் ஓரங்கட்டப்படுவார் என்பது வெள்ளிடைமலை.

# பொங்கல் பானையைச் சுற்றிய அரசியல்!!!







தமிழர்கள், இயற்கைக்கு நன்றி கூறும் வகையில் தைத்திருநாளைக் கொண்டாடுகின்றனர். தமிழர் பண்பாட்டு விழுமியங்களை அடுத்த தலைமுறைக் குக் கொண்டு செல்லல் மற்றும் ஆஸ்திரேலிய பரந்த சமூகத்தோடு பகிரல் என்பதை கோட் பாடாக கொண்டு பொங்கல், ஆஸ்திரேலிய தேசமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

புலம்பெயர்ந்து வாழும் ஆஸ்திரேலியாவின் அனைத்து மாநிலங்களிலும் தைப்பிறப்பை கொண்டாடுவதில் பல சமூக அமைப்புகள் தம்மை முன்னிலைப்படுத்தாது , தமிழ் சமூகத்தை முன்னிறுத்தி சிறப்புற செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த வருடம் மெல்பேர்ண், சிட்னி ,பேர்த் ,அடிலைட், பிறிஸ்பேன் ஆகிய நகரங்கில் பல்வேறு இடங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஒன்று கூடி தைத்திருநாளை கொண்டாடியிருந்தனர்.

'பென்டில்கில் 'இல் நடைபெற்ற பொங்கல் விழாவில் நடைபெற்ற சண்டித்தனங்கள் மற்றும் கழுத்தறுப்பு வேலை களால் சினம் கொண்டுள்ள மக்கள் வெளிப்படுத்திய கருத்து களை மையமாக வைத்து இந்தக்கட்டுரை எழுதப்படுகிறது.

பென்டில் கில் நகரப்பகுதியில் 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பொங்கல் விழாவை நடத்தி வந்தது. 2023 ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்தச்சங்கத்தின் நடத்துநர்கள் தங்களால் இதனை நடத்த முடியாது என்று பொதுக்கூட்டம் ஒன்றில் பொது அமைப்புகள் சார்பாக பொங்கல் விழாவை நடத்த முடிவு செய்து கையளித்துச் சென்றுவிட்டனர். இதனையடுத்து பொது அமைப்புகளின் பல கட்ட கூட்டங்களின் பின்னர் 2024 ஆம் ஆண்டு சிட்னி தமிழ் அமைப்புகளும் தமிழ் வர்த்தகர்களும் இணைந்து வீதியை மறித்து பொங்கல் விழாவை சிறப்புற நடத்தியிருந்தனர் - நடத்திக்காட்டியிருந்தனர்.

இம்முறையும் அவ்வாறே ஒழுங்குகள் நடைபெற்றன. சிட்னி தமிழ் அமைப்புகளும் தமிழ் வர்த்தகர்களும் இணைந்து நடத்தும் பொங்கல் விழா என்றே சிட்னி தமிழ் வர்த்தகர்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து நிதி வசூலிக்கப்பட்டது.

ஆனால் அதற்கிடையில் "சிட்னி யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கமும் - சிட்னி தமிழ் அமைப்புகளும் தமிழ் வர்த்தகர்களும் இணைந்து நடத்தும் மாபெரும் தமிழர் திருநாள்" என்ற வாசகத்துடன் முந்தி விழுந்து சுவரொட்டிகளில்உருட்டி விளையாடியுள்ளது இந்துக்கல்லூரி சிட்னி பழைய மாணவர் சங்கம். இந்தப் பழைய மாணவர் சங்கத்தின் உருட்டு விளையாட்டையடுத்து பொது அமைப்புகளின் கூட்டம் கூட்டப்பட்டு சுவரொட்டியில் இடம்பெற்ற தில்லுமுல்லுக் குறித்து பேசப்பட்டு - வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பின் பின்னர் அச்சிட்டப்பட்ட சுவரொட்டி மீள் பதிப்புச் செய்வதாக முடிவெடுக்கப்பட்டது. அத்துடன் யாழ்.இந்து கல்லூ ரியின் பழையமாணவர் சங்கத்தின் பெயரை சுவரொட்டியின் கீழ்ப்பகுதியில் எழுதுவதாகவும் முடிவெடுக்கப்பட்டது. காப்புறுதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான காரணங்களுக் காவே அது அனுமதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி புதிய சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு ஒட்டப்படவேண்டும் என்றும் அந்தக்கூட்டத்தில் தீர்மானிக் கப்படுகிறது. அதன்பின்னரே பழைய சுவரொட்டி கிழித்தெறி யப்பட்டதாகத் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க ஒரு சிலருக்கு தொலைபேசி மிரட் டல்களும் போயுள்ளன. அவை குறித்து பொலிஸ் முறைப் பாடும் செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

பென்டில் கில் தாதாக்கள் பலரும் தங்கள் கட்டுப்பாட்டில் தான் பொங்கல் விழா இருக்க வேண்டும் என்றும் அடாவடி யில் ஈடுபட்டு வருகின்றனராம். ஆனால், இவ்வாறான அடாவடிக் குழுக்கள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் - நியுசவுத்வேல்ஸ் நாடாளுமன்றம் ஆகியவற்றில் தமிழர்களின் பெயரால் நடத்தப்பட்டுவரும் பொங்கல் விழாவில் உள் நுழைவதே இல்லையாம். அங்கே கால் வைக்காதளவிற்கு கிளைமோர் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

பொங்கல் பானை காய்ந்து விட்டது. ஆனால் பொங்கலால் வந்த பிரச்சினை ஓயுமா என்பது கேள்விக்குறியாவே உள்ளது.

மெட்ராஸ் படத்தில் ஒரு சுவரைச் சுற்றி அரசியல் செய்வதைப்போல , இங்கும் சில அமைப்புகள் பொங்கல் பானையை சுற்றியே அரசியலை செய்கின்றன.

மெல்பேர்ணில் கேசி தமிழ் மன்றத்தினரால் 2011 ஆரம்பிக் கப்பட்ட பொங்கல் விழா தற்போது 26 அமைப்புகளுடன் சேர்ந்து 'தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா' பொதுத் தலைப்போடு சிறப்பாக பல வருடங்களாக நடந்து வருகின்றது. ஆனால் எந்தப் பிரசுரத்திலோ -தொடர்பாடலிலோ தமது அமைப் பின் பெயரை முன்னிலைப்படுத்த கேசி தமிழ் மன்றம் முயல வில்லை. ஒன்றுபட்ட தமிழ் சமூகத்தை முன்னிலைப்படுத்தி, அனைவரையும் ஒன்றுபடுத்தி, சுயநலம் மற்றும் சுயபெருமை இல்லாது, தமிழர்களின் பண்பாட்டையும் விழுமியங்களையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் - எம் சமூகத்தின் பெறுமதிமிக்க வாழ்வியலை மற்றைய சமூகங்களோடு பகிரும், ஒரு சமூக அமைப்புக்கான முன்மாதிரி என கேசி தமிழ் மன்றத்தைச் சொல்லாம். இவ்வாறானவர்களை முன்னுதா ரணங்களாக எடுத்து அடுத்த முறை சிட்னி பென்டில்கில் பொங்கல் விழா நடைபெறும் என நம்புவோமாக!

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175


365 MEDIA Production
AUSTRALIA TOUR
CENTEX HOMES
Proudly presents
Saturday
15
MARCH
2025
ஈழ மண்ணின் சொல்லிசை மன்னர்களின்
இசைக் கர்ஜனை
RAP CYLON
MEGA
MUSICAL
NIGHT
Tamil Rap 2025
MELBOURNE
SPRINGVALE TOWN HALL
18 Grace Park Ave, Springvale VIC 3171
QR Code
FOR
TICKET BOOKING
GOLD SPONSORS
CATERING PARTNER
Restaurant & Bakery
SOUTH INDIAN KITCHEN
MKS
MKS Spices'n Things
HENLEYS
MEDIA PARTNERS
YOUTH PARTNER
COMUNITY PARTNER
TRAVEL PARTNER
Tamil Australian
AUS தமிழ் TV
எதிரொலி
Ethiroli
SWINBURNE
CLUB
SriLankan
Airlines

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
மாசி 2025

# எப்போதும் எமக்கு பக்கபலமாக நிற்பது இந்தியாவே!

**நாம் சீனா சார்பானவர்களா?**

**வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் தஞ்சமடைந்துள்ள இடமே தையிட்டி**

**அர்ச்சுனாவின் விமர்சனம் ஒரு பொருட்டல்ல**

**தமிழக மீனவர்கள் மீதான சட்ட நடவடிக்கை தொடரும்**

## கடற்றொழில்துறை மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர்: ஜெரா



**நீங்கள் அரசாங்கத்தைப் பொறுப்பேற்று மூன்று மாதம் நெருங்குகின்றது. அவ்வகையில் இதுவரையான காலப்பகுதியில் நீங்கள் தேர்தல் பரப்புரைகளின்போது அளித்த வாக்குறுதிகளில் எவற்றையெல்லாம் நிறைவேற்றியுள்ளீர்கள்?**

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதியும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதியும் இலங்கையில் வாழுகின்ற மக்கள் இந்த நாட்டை எம்மிடம் ஒப்படைத்தனர். அந்த ஒப்படைப்பானது இலங்கை வரலாற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு தீர்மானமாகும். ஏனென்றால் தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்கு கொண்டுவந்தது மாத்திரமல்ல. அதன் மூலம் முழுநாட்டையும் ஒன்றிணைத்திருக்கிறார்கள். இதுநாள் வரைக்கும் தமிழர்களுடைய பிரதேசம், சிங்களவர்களுடைய பிரதேசம், முஸ்லிம்களுடைய பிரதேசம் என இனவாத ரீதியாக, மதவாத ரீதியாக பிளவுபட்டுக்கிடந்த நாட்டை, இந்தத் தேர்தல்கள் மூலமாக ஒன்றிணைத்திருக்கிறோம். எனவே இத்தகைய ஒன்றிணைப்பிற்காக வாக்களித்த மக்களுக்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தத் தேர்தல்களுக்கு முன்னர் எங்களின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. விசேடமாக, சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படுவார்கள், தாக்கப்படுவார்கள், ஏமாற்றப்படுவார்கள், மீண்டும் இனக்கலவரம் வெடிக்கலாம் என்றும், மறுபுறத்தில் டொலர் நானூறு ரூபாவாக அதிகரித்துவிடும், மீண்டும் வரிசையுகம் வந்துவிடும்,வெளிநாட்டு உதவிகள் கிடைக்காது போய்விடும், இதனால் நாடு அராஜகமான இருண்டயுகத்துக்குள் போய்விடும் என்றும் எங்கள் மீது இலங்கையின் பிரதான கட்சிகள் எல்லாமே குற்றச்சாட்டுகளையும், விமர்சனங்களையும் முன்வைத்து வந்தன. ஆனால் இன்றைக்கு நாம் ஆட்சியைப் பிடித்து மூன்று மாதங்களை நெருங்கிக்கொண்டிருக்கின்றோம்.

எனவே இந்த மூன்று மாதங்களை நாம் மீளத்திரும்பிப் பார்க்கின்றபோது, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்ட இலங்கையின் நிலைமை இப்போது மாறியிருப்பதாக நிதி நிறுவனங்கள் கூறுகின்றன. இதே நிறுவனங்கள் தான் இலங்கை வங்குரோத்து அடைந்த நாடு என்று அறிவித்திருந்தன. இப்போது அந்த நிறுவனங்களே ஆச்சரியப்படுமளவுக்கு இலங்கை முன்னேறிக்கொண்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல அன்றைக்கு வங்கிகள் எல்லாமே ஒரு தளம்பல் நிலையிலிருந்தன. இன்றைக்கு நிலையான தன்மைக்கு திரும்பியிருக்கின்றன. பங்குச்சந்தையிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. இன்றைக்கு பங்குச்சந்தையும் உயர்ந்துவருகின்றது. அதேபோன்று நாட்டில் டொலரின் பெறுமதியும் 300ரூபாவை நெருங்க முடியாதளவுக்கு பணப்பெறுமதியிழப்பை தக்கவைக்க முடிந்திருக்கிறது. இவையெல்லாம் கூட எங்களுக்கும் நாட்டிற்கும் கிடைத்த வெற்றி.

அரசியல்,சமூக, பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்த நாடே எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்படியான நாட்டினையே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் நிலையான இடத்திற்கு கொண்டு வந்திருக்கின்றது. ஆனால் இங்கிருக்கின்ற பிரச்சினை என்பது கடந்த 76 வருடங்களாகப் புரையோடிப்போயிருக்கின்ற பிரச்சினை. எனவே இந்தப் பிரச்சினைக்கு ஒருநாள் அல்லது இருநாளில் தீர்வு காணமுடியுமென்று நாங்கள் நம்பவில்லை. ஆனால் இந்த நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் அணுகுமுறையொன்றை கண்டுபிடிக்க முடியுமென்ற நம்பிக்கை இருக்கின்றது. அந்தவகையில், எங்களுடைய மக்கள் திருப்திப்படக்கூடியளவிற்கு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம்.

வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு அஸ்வெசும நிதிக்கொடுப்பனவை அதிகரித்திருக்கின்றோம். முதியோர் கொடுப்பனவை அதிகரித்திருக்கின்றோம். வறுமைக்கோட்டின் கீழ் கல்வியைத் தொடருகின்ற பிள்ளைகளுக்கு இலவச கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கியுள்ளோம். மண்ணெண்ணெய் மானியம் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். அதேபோன்று இந்த வரவு-செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வையும் வழங்கத் தீர்மானித்திருக்கிறோம். இவையெல்லாமே கடந்த மூன்று மாதங்களுக்கு எமது அரசாங்கத்தினால் செய்யப்பட்டவை.

அதேபோல இதுநாள் வரைக்கும் இந்நாடு லஞ்ச ஊழல் மோசடிகள் மலிந்த தேசமாகக் காணப்பட்டது. அதற்கு நாம் முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றோம். லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கான திசையை நோக்கிய நகர்வுகளை ஆரம்பித்திருக்கின்றோம். கடந்த காலங்களில் நாட்டின் ஜனாதிபதிகளே ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாம் அதில் மாற்றம் செய்திருக்கின்றோம். எனவே நாங்கள் ஆட்சிக்கு வரும்போது, இந்நாட்டில் புரையோடிப்போயுள்ள இலஞ்சம், ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவற்றை ஒழிப்பதோடு, ஜனநாயகம், சமத்துவம்,சமநீதி இவைகளை நாட்டு மக்களுக்குப் பெற்றுக்கொடுப்போம் என மக்களுக்கு வாக்குறுதியளித்தோம். இந்த விடயங்களை அடைவதற்கான கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான திசைநோக்கி நகரத்தொடங்கியிருக்கின்றோம். இதுவேதான் கடந்த மூன்று மாதங்களில் எங்களுக்கு கிடைத்த வெற்றி. மக்களுக்கு கிடைத்த வெற்றி.

**நீங்கள் உங்களின் வெற்றிகளை இப்படி அடுக்கினாலும், நாட்டில் அரிசி விலை அதிகரித்திருக்கின்றது. தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. உப்பின் விலைகூட அதிகரித்திருக்கின்றது. இதனால் மக்கள் மத்தியில் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே அதிருப்தியை சம்பாதித்துள்ளீர்கள் என்பதை உணரவில்லையா?**

நிச்சயமாக, அரிசி விலை உயர்ந்திருக்கின்றது. தேங்காயின் விலை அதிகரித்திருக்கின்றது. இந்த விலைவாசி அதிகரிப்புகள் மக்கள் மத்தியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அந்தத் தாக்கத்தை நாங்கள் அறிவோம். ஆனால் இந்த அரிசி தட்டுப்பாடு,விலையேற்றம் எல்லாமே எங்களால் உருவாக்கப்பட்டதல்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்து எண்பது நாட்கள்தான் ஆகின்றன.இந்த எண்பது நாட்களில் அரிசி உற்பத்தியினை செய்யமுடியாது தானே. தேங்காயைக் காய்க்கச்செய்யமுடியாதுதானே. உப்பினை விளைவிக்க முடியாது தானே. ஆனால் இதுநாள் வரைக்கும் அரிசி ஆலைகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரிசி விலை தீர்மானிப்பில் இருந்த ஏகபோக உரிமையை உடைத்திருக்கின்றோம். அதனால் மக்கள் படுகின்ற கஸ்ரங்கள், துன்பங்கள் எங்களுக்குத் தெரியும். இது எங்களால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. இந்த நெருக்கடிநிலைக்குத் தீர்வு காண்பதற்காகவே நாம் அரிசி இறக்குமதி, தேங்காய் இறக்குமதி, உப்பு இறக்குமதி ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றோம். இது ஆரம்பம் மட்டுமே. இன்னும் ஐந்து வருடங்கள் இருக்கின்றன. எமது ஆட்சியில் மக்கள் பசியால், பட்டினியால் வாடி வதங்கி இருந்ததாக சரித்திரம் இருக்கக்கூடாது. ஏனென்றால் இலங்கை மக்கள் உண்பதற்குப் போதுமான நெல் உற்பத்தி நம்மிடமிருக்கின்றது. மரக்கறி உற்பத்தி செய்கின்றோம். உப்பு உற்பத்தி செய்கின்றோம். தேங்காயையும் உற்பத்தி செய்கின்றோம். இந்த உற்பத்திகளை நாம் முழுமையாக்கிக்கொள்ள முடியுமாக இருந்தால், யாரும் பசியில் இருக்கவேண்டிய அவசியம் இருக்காது. அந்தத் திசையை நோக்கிய வேலைத்திட்டங்களையே நாம் முன்னெடுக்கின்றோம். நாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. இது இன்று நேற்று உருவாக்கப்பட்ட பிரச்சினையல்ல. 77 வருடங்களாக நீடித்து வருகின்ற பிரச்சினை. எனவே இந்தப் பிரச்சினைகளை மூன்று மாதங்களில் தீர்க்க முடியாதென அதிருப்திக்குள்ளாகியிருக்கின்ற மக்களிடம் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். எனவே மக்கள் எம்மீது நம்பிக்கை கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

**தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்தது. ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூட சர்வதேச நாணய நிதியத்திடம் தானே கடன்பெறுகின்றது?**

நாம் தேர்தல் காலத்திலேயே கடன் வாங்குவது குற்றமல்ல என்று சொல்லியிருக்கிறோம். வாங்கிய கடனை எதற்காகப் பயன்படுத்தினோம், பயன்படுத்துகின்றோம் என்பதுதான் முக்கியம். 2017ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தக் கடன் 13 ரில்லியன். இவ்வளவு பெரியதொகை கடன் இருக்கும்போது பணம் கையிருப்பில் இருக்காது. வாங்கிய கடனுக்கான சொத்துகள் இருக்கத்தானே வேண்டும். உதாரணத்திற்கு கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு பத்து லட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்றிருப்பின், கடன் செலவழிப்பின் இறுதியில் கட்டடம் இருக்கத்தானே வேண்டும். எனவே கடனாகப் பெற்ற தொகைக்கான சொத்துகளைத் தேடினால், இருக்கின்ற சொத்துகளின் மொத்தப் பெறுமதியுமே நான்கு ட்ரில்லியன்தான். ஒன்பது ட்ரில்லியனுக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. (09ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
ETHIROLI



# எப்போதும் எமக்கு பக்கபலமாக நிற்பது இந்தியாவே!



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே கடந்த காலத்தின் அனுபவம். இதனால் கடந்த 2022 ஆம் ஆண்டில் முன்னகர முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் நாடு தள்ளப்பட்டது. அப்படியானதொரு நாடே எங்களிடம் கிடைத்தது. சர்வதேச நாணய நிதியம் என்கிற கடன்பொறி கூட எங்களால் கொண்டுவரப்பட்டதல்ல. முன்னாள் ஆட்சியாளரான ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்டதொன்று. இப்போதிருக்கின்ற நிலையில் இங்கு எதுவுமில்லை. எனவே இன்னும் சில காலத்திற்கு இந்தக் கடனுக்கூடாகவே செல்லவேண்டிய தேவையிருக்கின்றது. அதற்காகவே நாம், நாட்டுக்கும், மக்களுக்கும் பாதகமாக இருக்கின்ற சர்வதேச நாணய நிதியத்தின் கடன்தொடர்பான உடன்படிக்கையில் இருக்கின்ற சரத்துகளை மாற்றியமைத்துக்கொண்டு, நாட்டு மக்களுக்கு சாதகத் தன்மைகளை அதிகரிக்கின்ற சரத்துகளை உள்வாங்கிக்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் பயணிக்கத் தீர்மானித்துள்ளோம். இது இன்று எம் மீது விழுந்திருக்கின்ற பொறி. இந்தப் பொறியிலிருந்து மீளுகின்ற திசையை நோக்கி நகரல் வேண்டும். அதுவரைக்கும் நாங்கள் இணைந்துபோகவேண்டியிருக்கிறதே தவிர,சதாகாலமும் இதே பொறியில் நாம் இருப்போம் எனத் தீர்மானிக்கவில்லை. இந்தக் கடன் நிறைவடைந்த பின்னர், மறுபடியும் சர்வதேச நாணய நிதியத்தின் சரத்துகளுக்கெல்லாம் உடன்பட்டு கடன் வாங்க வேண்டும் என்கிற நிலைமையில் நாம் இல்லை. எதிர்காலத்தில் கடன் வாங்க வேண்டியும் வரலாம். அந்த வேளையில்,இதனைவிட நிபந்தனைகள் குறைந்த நிதி நிறுவனங்கள் உண்டு, நாடுகள் உண்டு, அந்த நாடுகளுடன் மேற்கொள்ளுகின்ற சுமுகமான உறவை வைத்து இலகுவான கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நாம் நினைக்கின்றோம்.

**இந்தியா குறித்த ஜே.வி.பி.யின் கொள்கைசார்ந்த நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?**

ஆரம்பகாலம்தொட்டே இந்தியாவினால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டித்திருக்கின்றோம். அதிலொன்றுதான்,தென்னாசிய பிராந்தியத்தில் தான் பெரியண்ணன், மற்ற நாடுகள் அனைத்தும் தனக்குக் கீழ் இருக்கவேண்டும் என்கின்ற இந்தியாவின் மனநிலை. அதற்கு நாம் உடன்படமாட்டோம். ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவிற்கு இருக்கின்ற அதே உறுப்புரிமைதான் எங்களுக்கும் உள்ளது. இலங்கை சுயாதீனமான நாடு. தன்னாதிக்கம், இறைமையுள்ள நாடு. இப்படியான நிலைமையிருக்கின்றபோது, 1987 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நாம் கடுமையான எதிர்ப்பினை வெளிக்காட்டினோம். 1987 ஆம் ஆண்டிலிருந்த நிலைமைகள் இன்று இலங்கையில் இல்லை. அன்றிருந்த இந்தியா அல்ல இன்றிருப்பது. அன்றிருந்த உலகமல்ல இன்றிருப்பது. ஆக இன்றிருக்கின்ற இந்தியா வேறு, உலகம் வேறு, இலங்கை வேறு. அன்றைக்கு இருந்த அரசியல் நிலைமைவேறு. அன்று இந்தியாவும், ரஷ்யாவும் ஒரு கூட்டணியில் இருந்தனர். அன்று உலகம் அமெரிக்கா, ரஷ்யா என இரு துருவங்களாக இருந்தது. 1990 ஆம் ஆண்டில் இரட்டைத்துருவங்கள் சிதைந்து அமெரிக்கா தலைமையிலான ஒற்றைத்துருவமாக மாறியது. இன்றைக்கு உலகம் பல துருவங்களாக உடைந்துவிட்டது. உலகம் பல துருவங்களாகப் பிரிந்து வளர்ந்து வருகின்றது. அதனால் அன்றைக்கு இருந்த ஜே.வி.பி.யல்ல இன்றிருப்பது. உலக மாற்றங்களுக்கு ஏற்ப அதன் சாதக, பாதகங்களை உள்வாங்கிக்கொண்டு,பாதகமான விடயங்களை விலக்கிவிட்டு, சாதகமான விடயங்களை உள்வாங்கி தேவையான வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

**உங்களின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகம் சீனா பக்கம் சாய்கிறது என்கிற விமர்சனம் முன்வைக்கப்படுகிறதே?**

தோழர் அனுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், முதலாவதாக எங்கு சென்றார்? இந்தியாவுக்குத்தான் போனார். அந்நேரம் இந்த அரசாங்கம் இந்தியா பக்கம் சாய்ந்துவிட்டது என்றனர். இந்தியா செய்த உதவிகளை ஏற்றுக்கொண்டோம். அந்நேரம் இந்தியாவைக் கடுமையாக எதிர்த்தவர்கள் தற்போது இந்தியாவுடன் நிற்கிறார்கள் என்றனர். அதற்குப் பிறகு நாம் சீனாவுக்குச் சென்றோம். சீனாவில் எமக்கு அமோகமான வரவேற்பளிக்கப்பட்டது. சீனாவின் பல்வேறு உயர்மட்டத்தினரும் சந்திப்புகளை நடத்தினர். இந்த சந்திப்புகள் வழமையான ஒன்றுதான். பொருளாதார ரீதியில் தம்மை முன்னிலைப்படுத்த முயலுகின்ற நாடுகள் மத்தியில் ஏனைய நாடுகளைக் கையாள்வதற்குப் பல்வேறு தந்திரோபாய உத்திகள் உள்ளன. நாம் முதலில் இந்தியாவுக்குச் சென்றோம். அவ்வேளையில் இந்தியா சார்பானவர்கள். பின்னர் சீனாவுக்குச் சென்றோம். அவ்வேளையில் சீனா சார்பானவர்கள். தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஜனாதிபதி சென்றிருக்கின்றார். ஆகவே தற்போது அரபு நாடுகள் சார்பானவர்கள். இனிவரும் காலங்களில் ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கு செல்லவுள்ளோம். எனவே அந்நேரத்தில் இடதுசாரிகளாக இருந்தவர்கள், முதலாளித்துவ நாடுகள் பக்கம் சாய்ந்துவிட்டனர் என்பார்கள். நாம் மிகத்தெளிவாக இருக்கின்றோம். எல்லோரையும் அன்பாக அரவணைத்துக்கொள்ள நாங்கள் தயார். அதற்காக ஒருவரின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு, மற்றையவரை எட்டி உதைக்கின்ற வேலையை நாங்கள் செய்யப்போவதில்லை. எனவே எக்காரணம் கொண்டும் இந்தியா பயப்படவேண்டிய அவசியமில்லை. நாங்கள் இப்போதும் சரி,எதிர்காலத்திலும் சரி எங்களின் கொடுக்கல்வாங்கல்களின்போது முன்னுரிமையளிக்கின்ற நாடு இந்தியாதான்.

**இந்திய மீனவர்களால் வடக்கு கிழக்கு தமிழ் மீனவர்கள் மீது ஏற்படுத்தப்பட்டுவரும் தொழில்சார் அபகரிப்பு விடயத்தை எப்படி கையாளப்போகிறீர்கள்?**

நான் கடற்றொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்கும் முன்பே இங்கிருக்கின்ற நிலைமை என்னவென்று எனக்குத் தெரியும். இந்திய மீனவர்களின் பிரச்சினையும் இன்று நேற்று உருவானதல்ல. நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினை சுமுகமாக தீர்த்துவைக்கப்படவேண்டும் என்பதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போதும் அவ்வாறான முயற்சிகள் மேள்கொள்ளப்படுகின்றன. ஆனாலும் இன்னமும் எங்களால் ஒரு சுமுகமான நிலைமைக்குக் கொண்டுவரமுடியாமல் இருக்கின்றது. எங்களின் இந்த ஐந்துவருட ஆட்சிக்காலத்தில் இந்திய - தமிழக மீனவர்களின் படகுகள் எங்களுடைய கடலை ஆக்கிரமிப்பதையும், எங்களுடைய கடலை அழிப்பதையும் தடுத்து நிறுத்த முடியுமென நாங்கள் நம்புகின்றோம். இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியாவிலும், தமிழகத்திலும் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த ரோலர் படகுத் தொழில் நல்லதல்ல. கடலின் மொத்த வளத்தையும் அழித்து நாசம் செய்கின்ற வேலை. எனவே இதனைக் கட்டுப்படுத்த சட்டரீதியான நடவடிக்கைகள் தொடரும். அதில் எவ்வித மாற்றமும் இல்லை. அதேவேளை இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். அடுத்தவாரம் கூட இந்தியத் தூதுவரை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளேன்.

**யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரை விடயம் இப்போது கொதிநிலையாக மாறியிருக்கிறது. இந்தப் பிரச்சினையை எப்படி கையாளப்போகின்றீர்கள்?**

தையிட்டில் விகாரை அமைக்கப்பட்டது சரியா அல்லது தவறா, அங்கு விகாரை அமைக்கப்பட்டிருப்பது சாதகமா அல்லது பாதகமா, அது சட்டரீதியாக அமைக்கப்பட்டிருக்கிறதா அல்லது சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதெல்லாம் வேறு கதை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்று அந்த விகாரை அமைத்து முடிக்கப்பட்டு விட்டது. அமைத்து முடிக்கப்பட்டதன் காரணமாக விகாரையை உடைக்க முடியாது. அது சாத்தியமற்றது. அதன்மூலமாக நடக்கப்போவது என்னவென்றால், தென்னிலங்கையில் தற்போது மோசமாக ஒடுக்கப்பட்டு, கீழ்நிலையில் இருப்பது அங்கிருக்கின்ற இனவாதம். அந்த இனவாதம் மறுபடியும் தூண்டப்படுகின்றது. எனவே இந்த தையிட்டி விகாரை என்பது மீண்டும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் ஏற்படுத்துகின்ற ஒன்றாகும். எதிர்காலத்தில் இது சம்பந்தப்பட்ட அனைவருடனும் நாம் பேசவுள்ளோம். அனைத்து மத பீடங்களுடனும் நாங்கள் பேசுவதற்குத் தயார். அந்தப் பிரதேசத்திலிருக்கின்ற மக்களுடனும் நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். மீண்டும் மதவாதத்தைக் கொண்டு செயற்படவேண்டாம். அது எமது நாட்டுக்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் பாதகமான ஒன்று என்பதை அந்த மக்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்த அரசியல்வாதிகள் தஞ்சமடைகின்ற கடைசி இடம்தான் மதவாதமும் இனவாதமும். தென்னிலங்கையில் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கும் வேறு எதுவும் கிடையாது. லஞ்ச - ஊழலைப் பற்றிப் பேசமுடியுமா? அதிகார துஷ்பிரயோகங்களைப் பற்றிப் பேச முடியுமா? பேச முடியாது. அப்படியானவர்களுக்குத் தற்போது தேவைப்படுவது இனவாதமும்,மதவாதமும் தான். அதுமாத்திரமின்றி அங்கிருக்கின்ற எல்லா அரசியல்வாதிகளையும் மக்கள் நிராகரித்திருக்கின்றனர். அதேபோன்று வடபகுதியில் இருக்கின்ற அரசியல்வாதிகள் மக்களால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்கள் தங்களைத் தக்கவைத்துக்கொள்வதற்குத் தஞ்சமாக, தங்குமிடமாக, , தையிட்டியைப் பயன்படுத்துகிறார்களா என்ற கேள்வி எழுகின்றது. நாம் மக்கள் பக்கமிருக்கின்றோம். தையிட்டியை மையமாக வைத்து மதவாதத்தைத் தூண்டுவதற்கு மக்கள் இடமளிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணத்தின் சக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன்,யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களால் விமர்சிக்கிறாரே? இதற்கு உங்களின் பதிலென்ன?**

அர்ச்சுனாவினுடைய விமர்சனங்களுக்கு நான் பதிலளிக்கப்போவதில்லை. அவரின் விமர்சனம் எனக்குப் பெரியவிடயமல்ல. ஏனெனில், நாம் 1994 ஆம் ஆண்டு பகிரங்க அரசியலுக்கு வந்தோம். அந்தக் காலத்திலிருந்தே நாம் இங்கிருக்கின்ற அரசியல்வாதிகளுடனும், ஊடகங்களுடனும் உறவாடிக்கொண்டிருக்கின்றோம். இன்று பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் முன்வைக்கப்படும் விமர்சனங்களைவிட மிக மோசமான வகையில் எம் மீதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட காலங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். அவ்வேளையில்கூட நாங்கள் அலட்டிக்கொள்ளவில்லை. அண்மைக்காலத்திலும் அவ்வாறே திட்டித்தீர்த்தனர். அலட்டிக்கொள்ளவில்லை. தோழர் அனுரகுமார பற்றி என்ன சொல்லவில்லை? அது குறித்து தோழர் அனுர என்றைக்காவது அலட்டிக்கொண்டாரா? தூற்றுவோர் தூற்றட்டும். போற்றுவோர் போற்றட்டும். நாம் செல்லும் வழி நேர்வழியாகட்டும் என்கின்ற தாரக மந்திரத்தைக் கொண்டு செயற்படுகின்ற அமைப்பென்ற வகையில் நாங்கள் அர்ச்சுனாவின் விமர்சனங்கள் குறித்து அலட்டிக்கொள்வதில்லை. அதுவொரு பொருட்டல்ல.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198

# தமிழ் மரபு பகிரும் விக்டோரியத் தமிழர்களின் நாடாளுமன்றப் பொங்கல் விழா–2025



2019இல், தை மாதத்தை 'தமிழ் மரபுத் திங்கள்' என சமூக அமைப்புகளாக இணைந்து விக்டோரியாவில் பிரகடனப் படுத்தி, முதன்முறையாக பொங்கல் விழா விக்டோரிய நாடாளுமன்றத்தில் கொண்டாடப்பட்டது. தமிழ் மரபு பேணும் - பகிரும் விக்டோரியத் தமிழர்களின் பாரம்பரியத் தின் தொடர்ச்சியாக - தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா 2025 பிரதான நிகழ்வின் நீட்சியாக அமையும் நாடாளுமன்ற பொங்கல் கொண்டாட்டம் 05 பெப்ரவரி 2025 அன்று விக்டோரிய நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.



# தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா–2025

## விக்டோரியத் தமிழர்களின் ஒருங்கிணைந்த முயற்சியில் அமைந்த

## தேசத்தின் மாபெரும் பொங்கல் திருவிழா





2011 இல் உதயமாகி, 2015இல் விக்டோரியாவின் பெரும் பொங்கல் விழாவாக வளர்ந்து, 2019 இல் விக்டோரியத் தமிழர்களின் ஒருங்கிணைந்த தனித்துவமான திருவிழாவாக உயர்ந்து, 2024இலிருந்து 8000 மக்களை ஒன்றுகூட்டும் தேசத்தின் மாபெரும் பொங்கல் விழாவாகப் பரிணாம வளர்ச்சி அடைந்த "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா" இன் 2025 ஆண்டு நிகழ்வு, புகழ்பூத்த ஊயரடகனைடன சுயஉநஉழரசளந இல் ஜனவரி 18 ஆம் திகதி நடைபெற்றது.

ஊர் கூடிப் பொங்கும் பெரும் பொங்கல், முளைப்பாரி - கும்மியாட்டம், தமிழர் கலைவடிவங்களின் செழுமையைப் பறைசாற்றிய கலை நிகழ்வுகள், கிளித்தட்டு, சடுகுடு உட்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்கள், கண்காட்சிகள், எழுபதுக்கும் மேற்பட்ட வர்த்தக அங்காடிகள், சிறுவர் சவாரிகள் மற்றும் இசை நிகழ்வுகள் என பல அம்சங்கள் இணைந்த முழுமையான பண்பாட்டுத் திருவிழாவாக - குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவருக்கும் நிறைவு அளித்த கொண்டாட்டமாக இந்த நிகழ்வு அமைந்தது.







# தையிட்டி – மக்கள் போராட்டத்தின் பின்னணி என்ன?



“நான் இப்ப பதினெட்டாவது வீட்டில இருக்கிறன் தம்பி. 33 வயசில இந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்தம். இப்ப 68 வயசாகுது. இன்னமும் காணிகள விடுவிக்கேல்ல. நான் பொம்புளயா இருந்தும் கஸ்ரப்பட்டுக் கட்டின வீடு வெறும் மண்மேடாக் கிடக்கு. எனக்கு காசும் வேண்டாம். வேற காணியும் வேணாம். என்ர காணியத் தாங்கோ” எனக் குமுமி நின்று போர்க்குரல் எழுப்பிக்கொண்டிருந்த தையிட்டி காணி விடுவிப்புக்கோரிய போராட்டக்காரர்கள் மத்தியில் நின்று கமராக்கள் முன்பாக, ஒரு குழந்தைபோல குமுறிக் கொண்டிருந்தார் வயதான தாயொருவர். அந்தத் தாயின் கோரிக்கைதான் அங்கு போராட்டத்தில் நின்ற அனைவரினது கோரிக்கையாகவும் இருந்தது.

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு பகுதியில், காங்கேசன்துறை சிறுநகரில் இருக்கிறது தையூர் எனப் பெயர் பெற்றிருந்து தையிட்டி எனப் பெயர் மாறிய தமிழர் கிராமம். 1948 ஆம் ஆண்டில் அங்கு வசித்த தமிழர் ஒருவர் பௌத்த பிக்கு ஒருவருக்குத் தனது 1.25 பரப்புக் காணியைத் தானமாக வழங்கினார். காணியை காங்கேசன்துறையில் வேலைசெய்த சிங்களவர் ஒருவரிடம் ஈடுவைத்து, பின்னர் அது மீளமுடியாமல் மூழ்கிவிட்டது என்றும் ஒரு சாரார் சொல்கின்றனர். ஆனால் உண்மை என்ன என்பதைச் சொல்ல இப்போது அந்தக் காணி உரிமையாளரின் சார்பிலும் யாருமில்லை. காணியைத் தானமாகவோ, ஈடாகவோ பெற்ற பிக்குவின் சார்பிலும் யாருமில்லை.

“நான் இங்க இருந்த இடம்பெயரேக்க ஒன்பதாம் வகுப்பு படிச்சிக்கொண்டிருந்தன். ஆனால் அப்ப வரைக்கும் இங்க ஒரு புத்தவிகாரை இருந்ததை நான் காணேல்ல. இருந்ததெல்லாம் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னமே சண்டையில் அழிஞ்சிற்று என்று எங்களுக்கு மூத்த ஆக்கள் சொல்லியிருக்கினம். அதோட அது பெரிய விகாரையாக எல்லாம் இருக்கேல்ல. புத்தர் சிலைய வைச்சித்தான் கும்பிட்டவை. அந்த நேரம் காங்கேசன்துறை சீமெந்து பக்ரரி, பேக்கரிகளில் வேலைசெய்த சிங்கள ஆக்கள் கும்பிட வருவினம்” எனப் போராட்டத்தில் கலந்துகொண்ட இன்னொரு காணி உரிமையாளர் தனது வாழ்வனுபவத்தைச் சொன்னார்.

1991 ஆம் ஆண்டு தையிட்டி கிராமத்தைப் பூர்வீக நிலமாகக் கொண்ட மக்களை ஒரே இரவில் வெளியேற்றிய இராணுவம் அந்தக் கிராமம் உள்ளடங்கிய வலிகாமம் வடக்கின் பெரும் பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்தது. இராணுவம் தையிட்டியைக் கைப்பற்றும்போது அங்கு விகாரையும் இருக்கவில்லை. புத்தர் சிலையுமிருக்கவுமில்லை. 1991இல் வெளியேற்றப்பட்ட மக்கள், 2014ஆம் ஆண்டுவரை அங்கு குடியமர அனுமதிக்கப்படவில்லை. மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே வலிகாமம் வடக்கின் சில பகுதிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இதன் பின்னணியிலேயே தையிட்டியும் விடுவிக்கப்பட்டது. தையிட்டி விடுவிக்கப்பட்ட சில காலத்திலேயே, மக்களிடம் விடுவிக்கப்படாதிருந்த பகுதிக்குள், கடந்த 2017ஆம் ஆண்டில் அப்போதிருந்த வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே விகாரை ஒன்றுக்கான அடிக்கல்நாட்டு நிகழ்வைச் செய்திருந்தார். விகாரை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட எதிர்ப்பினாலும், பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட எதிர்ப்புத் தீர்மானங்களினாலும், விகாரை அமைப்பு பணிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தன.

2019 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் கொரோனாப் பெருந்தொற்றினால் பீதியில் உறைந்து கிடக்க, முன்னாள் முப்படைகளின் தளபதி சவேந்திரசில்வா, தமிழ் மக்களுக்கு உரித்தான காணிக்குள் புதிய திஸ்ஸ விகாரைக்கான அடிக்கல்லினை நாட்டினார். அன்றிலிருந்து அங்கு பௌத்த பிக்கு ஒருவரும் குடியேறினார். அவரைப் பாதுகாக்க இராணுவக் காவலரண் ஒன்றும் அமைக்கப்பட்டது. அயலிலிருந்த இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினர் இரவு பகலாக இலங்கையின் இரண்டாவது உயரமான பௌத்த விகாரையைக் கட்டியும் முடித்தனர். இவ்வளவு காலத்திற்கும் தற்போது பௌத்த விகாரைக்காக அபகரிக்கப்பட்டிருக்கின்ற 150 பரப்புக் காணியை உரித்தாகக் கொண்ட காணிகளின் உரிமையாளர்கள் போராட்டங்களை நடத்தினர். அரச அதிகாரிகளைச் சந்தித்து காணி விடுவிப்புக் குறித்து வலியுறுத்தினர். இராணுவத் தளபதிகளைச் சந்தித்துப் பேசினர். ஆனால் பௌத்த விகாரை வளர்ந்ததைத் தவிர வேறு எதுவும் இடம்பெறவில்லை.

எனவேதான் இறுதியாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைத் தம்மோடு இணைந்து போராட்டம் நடத்த வரச் சொல்லி தையிட்டி மக்கள் அழைத்தனர். கடந்த 2022ஆம் ஆண்டிலிருந்து சில நாட்கள் தொடர் போராட்டத்தை நடத்தியவர்கள், பின்னர் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும், குறித்த சட்டவிரோத பௌத்த விகாரையில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும் நாட்களிலும் போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

இத்தகையதொரு போராட்டமே கடந்த பௌர்ணமி தினத்திலும், அதற்கு முந்தையதினத்திலும் நடத்தப்பட்டது. ஆனால் இந்தப் போராட்டத்திற்கு அனைத்து மக்களையும் கலந்துகொள்ளும்படி போராட்டக்காரர்கள் கோரியிருந்தனர். அதற்கு காரணமொன்று இருந்தது.

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திஸ்ஸநாயக்க கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு வருகைதந்திருந்தார். தேர்தல் பரப்புரைகாலத்தில், தமது ஆட்சிக்காலத்தில் குடிப்பரம்பலை மாற்றும் விதத்திலான சிங்களமயமாக்கல் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படாது என அனுர தெரிவித்திருந்தமைய நம்பியிருந்த தையிட்டிக் காணி உரிமையாளர்கள், இந்தப் பயணத்தின்போது அவர் தமக்கு சாதகமான தீர்வொன்றை வழங்குவார் என நம்பியிருந்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் ஜனாதிபதியின் முன்னிலையில் தமது காணிவிடுவிப்பு விடயத்தை எடுத்துரைக்குமாறும் கேட்டிருந்தனர். அதன்படி ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், தையிட்டியில் தனியார் காணிகளை அடாத்தாகப் பிடித்து இராணுவம் அமைத்துள்ள பௌத்த விகாரையை அகற்றி, அந்தக் காணிகளை மீளவும் காணி உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டும் என்கிற கோரிக்கையை அவர் முன்வைத்தார். ஜனாதிபதி இதற்குப் பதில் வழங்கத் தயாரானபோது குறுக்கிட்ட வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தையிட்டி மக்கள் நட்டஈட்டினைப் பெறவும், மாற்றுக்காணிகளைப் பெறவும் தன்னிடம் சம்மதித்துவிட்டனர் எனத் தெரிவித்தார். உடனடியாகவே பதறியடித்துப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், விகாரையை இடிப்பதெல்லாம் சாத்தியப்படாது (இடிப்பதாக அவரைத்தவிர வேறு யாரும் அவ்விடத்தில் குறிப்பிடவில்லை) மாற்றுக்காணிகளைப் பெற்றுக்கொள்வதே ஒரே தீர்வு எனச் சொன்னார். இத்தோடு ஏற்பட்ட சலசலப்புக்களை அடுத்து ஜனாதிபதி இதற்குப் பதில் வழங்காமல் தப்பித்துக்கொண்டார்.

இதற்கு அடுத்த சில தினங்களில், யாழ்.மாவட்ட செயலகத்திற்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்த அகில இலங்கை பௌத்த மகா சங்கம் என்கிற அமைப்பு, (இதன் தலைவர் தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் இயக்குநர்) தையிட்டியில் விகாரை விஸ்தரிப்பிற்காக 14 ஏக்கர் காணிகளைத் தரவேண்டும் எனவும், பொதுமக்களுக்கோ வேறு தேவைகளுக்கோ அந்தக் காணியைப் பயன்படுத்தமுடியாதெனவும் தெரிவித்திருந்தது.

இந்த சம்பவத்தினால் அதிருப்தியும், கோபமும் அடைந்த தையிட்டி காணி உரிமையாளர்கள், அடுத்துவந்த சில தினங்களிலேயே வட மாகாண ஆளுநரைச் சந்தித்து தமக்கு மாற்றுகாணிகளோ அல்லது நட்டஈடுகளோ தேவையில்லை எனத் தெரிவித்துவிட்டனர். எனவே இந்த அதிருப்தியை தெற்கிற்கும், இதனோடு தொடர்புபட்டவர்களுக்கும் வெளிப்படுத்தி தமது நிலவுரிமையை நிலைநாட்டவே கடந்த பௌர்ணமி தினங்களில் பாரியளவிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அடி மேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பதைப் போல, இந்தப் போராட்டம் ஏற்படுத்திய கொதிநிலையின் விளைவால், இந்தக் கட்டுரை எழுதப்படும்போது இராணுவம் தையிட்டி பௌத்த விகாரையைத் தம்மால் பராமரிக்க முடியாதெனவும், அதனைப் பௌத்த சாசன அமைச்சிடம் கையளித்து, பதிவுசெய்து மேற்கொண்டு செய்யவேண்டியதைச் செய்யுமாறும் தெரிவித்துள்ளது. இதேவேளை இந்த விகாரையானது திஸ்ஸ விகாரை என்ற பெயரில் ஏற்கனவே பௌத்தசாசன அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் அது 1956ஆம் ஆண்டில் தமிழரிடமிருந்து பெறப்பட்ட காணியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையின் பெயராகும். அந்த விகாரைக்கு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டே தையிட்டியில் தனியார் காணியில் இராணுவம் புதிய விகாரையை அமைத்துள்ளது. எனவே இப்போது இந்தப் புதிய பௌத்த விகாரையை கவந்திஸ விகாரை எனப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அப்படி பதிவுசெய்வதாயின் விகாரைக்குரிய காணியின் உறுதி உள்ளிட்ட ஆவணங்கள் தேவைப்படும். இந்த இடத்தில்தான் தையிட்டி விகாரை விடயம் தற்போது சிக்கியிருக்கிறது. அரசினால் தீர்க்கமுடியாதிருக்கின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பொதுமக்கள் முன்வைக்கும் தீர்வை அரசு நடைமுறைப்படுத்துவதே பொருத்தமானதாக அமையும்.

“எங்களின் காணியில் இராணுவம் அமைத்துள்ள சட்டவிரோத பௌத்த விகாரையை அகற்றி, உங்களது காணியில் அமைத்துக்கொள்ளுங்கள். எங்களது காணிகளை எங்களிடம் தாருங்கள்” - என்பதே பொதுமக்கள் இந்தப் பிரச்சினைக்கு முன்வைக்கும் தீர்வு. இதனைச் செய்யுமா அனுர அரசு? ■

# சிட்னி தமிழர் தைபொங்கல் பெருவிழா–2025



# சிட்னி தமிழர் தைபொங்கல் பெருவிழா–2025





# கஜேந்திரகுமாரின் தடுமாற்றங்கள்



கருணாகரன்

தன்னுடைய அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியாத நெருக்கடிக்குள் கஜேந்திரகுமார் தள்ளப்பட்டுள்ளார். இது அவரைத் தடுமாற வைத்துள்ளது. இதனுடைய வெளிப்பாடுகளே, "இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிப் பேசுவதற்கு முன்னேற்பாடாகத் தமிழ்க் கட்சிகள் ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டும்" என்று கூறுவதும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் யாழ்ப்பாண வருகையின்போது, அபிவிருத்தியைப் பற்றிய கோரிக்கையொன்றைக் கையளித்ததும், தமிழ்ப்பிரதேசங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் கருத்துகளும். இதை ஊன்றிக் கவனித்தால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது - தமிழ்த்தேசிய அரசியல் நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பது தெரியவரும்.

"அரசியற் தீர்வே வேண்டும். அபிவிருத்தி அரசியல் என்ற மாயை வேண்டாம்" என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி. முன்னணி மட்டுமல்ல, ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகளின் நிலைப்பாடும் இதுவாகவே இருந்தது. "உரிமை அரசியலே எமது. சலுகை அரசியல் அரசாங்கத்தை ஆதரிக்கும் சக்திகளுடையது" என்று. அபிவிருத்தி அரசியலை சலுகை அரசியலாகக் கருதின தமிழ்த்தேசியத் தரப்புகள். இதனால் அபிவிருத்தி அரசியலை மறுதலித்து, அதை முன்னெடுத்த தமிழ்த் தரப்புகளை அரசாங்கத்தின் அடிவருடிகளாகச் சித்தரித்தன.

ஆனால், நிலைமை வேறாக மாறியது.

"அபிவிருத்தியும் அரசியற் தீர்வும் அவசியமானவை. இரண்டும் இரண்டு கண்கள். ஒன்றில்லாமல் ஒன்றில்லை" என்றவாறாக. இதனால் தவிர்க்க முடியாமல், உரிமை அரசியலோடு, அரசியற் தீர்வோடு அபிவிருத்தியைப் பற்றியும் பேச வேண்டும் என்ற நிலை உருவாகியது. மக்களும் இதையே எதிர்பார்த்தனர். மக்களுடைய வாழ்க்கைக்கு, அவர்களுடைய தேவைகளுக்கு அபிவிருத்தி அவசியமானது. அவர்களுக்கு வீதிகள் வேண்டும். பாடசாலைகளும் அதற்கான வளங்களும் வேண்டும். மின்சாரம் வேண்டும். சீரான போக்குவரத்து வேண்டும். மானியமும் நிவாரணமும் வேண்டும். தொழில்வாய்ப்புகள் வேண்டும். தொழிற்துறைகளுக்கான மேம்பாடு வேண்டும். மருத்துவ வசதிகள் வேண்டும். இப்படி வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் மக்கள் பெற வேண்டியிருந்தது. மக்களுக்குத் தேவையாக இருந்தது.

இதற்கு அபிவிருத்தி வேண்டும். இல்லையென்றால், மக்களுடைய வாழ்க்கை நெருக்கடிக்குள்ளாகும். அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அவர்கள் தாம் வாழும் இடங்களை விட்டு, நாட்டை விட்டுப் பெயர வேண்டிய சூழல் உருவாகும். இதுவே உருவாகியது. போர்க்காலத்திலும் போருக்குப் பிந்திய சூழலிலும் வடக்குக் கிழக்கிலிருந்து அதிகமானோர் வெளியேறுவதற்கு இதொரு அடிப்படையான காரணமாகும்.

"வாழ்க்கைக்கான வசதிகளும் அடிப்படைத் தேவைகளும் வேண்டாம். எமக்கு உரிமை மட்டுமே வேண்டும். உயிரினும் மேலானது உரிமைதான்" என்று மெய்யாகவே ஒவ்வொருவரும் கருதியிருந்தால் எவருமே நாட்டை விட்டுப் பெயர்ந்திருக்க மாட்டார்கள். தாய் நிலத்தில் நின்றே போராடியிருப்பர். ஆனால், அது ஒருபோதுமே சாத்தியமாவதில்லை. எமக்கு மட்டுமல்ல, உலகெங்குமுள்ள பொது விதி இதுதான். எந்த உயிரினமும் தன்னுடைய வாழ்க்கையையே முதன்மையாக்க் கொள்ளும். அதை நோக்கியே அது செல்லும் - செயற்படும். கண்டங்களை விட்டு, பல்லாயிரம் மைல்களைக் கடந்து பறவைகள் கூட புலம்பெயர்ந்து வலசையாகச் செல்வதும் பல நூறு மைல்களைக் கடந்து விலங்குகள் நடப்பதும் தமது வாழ்க்கைக்காகவன்றி வேறு எதற்காக?

ஆகவே, இந்த நிலையில் முடிந்தளவுக்கு மண்ணில் வாழ்வதற்கான ஏதுநிலைகளை உருவாக்கினாற்தான் புலப்பெயர்வைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும். சொந்த நிலத்தில் பொருளாதார பலத்துடன் வாழும்போதே மக்களுடைய போராடும் ஆற்றல் வலுப்பெறும். மட்டுமல்ல, தேசிய இனமொன்றின் பலமும் உரம்பெறும். மக்கள் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து சென்றால், நிலம் வெறுமை (வறுமை) அடைவதோடு, சனத்தொகை வீழ்ச்சியும் ஏற்படும். இது மக்கள் பிரதிநிதித்துவத்திலும் வீழ்ச்சியை, நெருக்கடியை உருவாக்கும். இன்று வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் சந்தித்திருக்கின்ற நெருக்கடிகளில் ஒன்று, சனத்தொகை வீழ்ச்சியாகும்.

ஆகவேதான் தேசிய அடையாளத்தையும் இருப்பையும் பேணுவதென்பது, குறித்த மக்கள் தமது வாழிடத்தில் வாழக்கூடிய அடிப்படைகளை உருவாக்குவதிலேயே மையங்கொண்டுள்ளது. குறித்த மக்கள் தமது வாழிடத்தை இழக்கும்போதும் அதிலிருந்து வெளியேறும்போதும் அவர்களுடைய தேசிய அடையாளமும் இருப்பும் குலைந்து பலவீனமடையத் தொடங்குகிறது என வாதிடப்படுகிறது. ஒவ்வொருவரும் தத்தமது வாழிடங்களில் வாழும்போதுதான் அந்த இடத்தோடிணைந்த வாழ்வையும் அதனுடைய பண்பாட்டு அடையாளங்களையும் தொழிற்துறைகளையும் தொடரக் கூடியதாக இருக்கும். பேணக்கூடியதாக இருக்கும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# கஜேந்திரகுமாரின் தடுமாற்றங்கள்

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புரிதல் இருந்தபடியால்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளிட்ட விடுதலை இயக்கங்கள் அனைத்தும் பேச்சுவார்த்தைகளின்போது, “மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு இடமளிக்கப்பட வேண்டும். பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும். இராணுவ நெருக்குவாரம் நீக்கப்படுவது அவசியம். மக்களுடைய வாழ்வாதாரமும் அவர்களுக்கான அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டும்” என்று வலியுறுத்தின. இதை அவை பேச்சுவார்த்தைகளின்போது கோரிக்கைகளாக அல்லாமல் நிபந்தனைகளாகவே முன்வைத்தன.

ஆனால், விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸோ (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ) இலங்கைத் தமிழரசுக் கட்சியோ, ஏனைய விடுதலை இயக்கங்களின் அடையாளத்தோடிருக்கும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றவையோ இந்தப் புரிதலும் விளக்கமும் இல்லாமலே தமது அரசியலைத் தொடர்ந்தன. அது அடிப்படையற்ற, உள்ளடக்கமற்ற ‘தமிழ்த் தேசியம்‘ என்ற வெற்றுக் கோதாகவே இருந்தது. இன்று தமிழ்த்தேசிய அரசியல் கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறையிலும் மக்கள் மத்தியிலும் பலவீனப்பட்டிருப்பதற்கு இந்தப் புரிதலற்ற தன்மையும் தவறுமே காரணமாகும்.

இதிலிருந்து மீள வேண்டுமானால் இப்பொழுது அபிவிருத்தி அரசியலையும் இணைத்து அல்லது அதை முன்னிலைப்படுத்தியே தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலை - நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. இதனால்தான் அபிவிருத்தி அரசியலையும் இணைத்துப் பேச முன்வந்துள்ளன தமிழ்த்தேசியத் தரப்புகள்.

தமிழரசுக் கட்சி இதை 2015 இலிருந்து மெல்ல ஆரம்பித்தது. ஆனாலும் அதற்கான எத்தகைய தயாரிப்புகளையும் அது செய்யவில்லை. மக்களுடைய தேவைகள், அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் பற்றிய கள ஆய்வு, தகவல் மற்றும் தரவுத் திரட்டுகள், நிர்வாக ஒழுங்குகளில் நிலவும் இடர்ப்பாடுகள் குறித்தெல்லாம் ஆய்ந்தறியாமல், அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பங்கேற்றனர், கூட்டமைப்பினர். இது அவர்களைப் பங்கேற்பாளர்கள், பேசும் தரப்பினர், அதற்கு உரித்துடையோர் என்ற நிலையை வழங்காமல், வெறும் பார்வையாளர்கள் என்ற நிலையிலேயே வைத்திருந்தது.

இந்த இடத்துக்கு இறுதியாகக் கஜேந்திரகுமாரும் அவருடைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும்) வந்து சேர்ந்திருப்பது வரலாற்றுப் படிப்பினையாகும். இதன் விளைவாகவே அவர் 20 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிடம் கொடுத்தார்.

தீவிரத் தேசியவாதத்தைப் பேசி வந்த கஜேந்திரகுமார் இப்படி இறங்கி வந்திருப்பது அவருடைய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். இதைக் கஜேந்திரகுமாரின் வீழ்ச்சியென யாரும் கருதத் தேவையில்லை. உண்மையில் இது வீழ்ச்சியுமல்ல. ஆனால், அப்படித்தான் தென்னிலங்கைத் தரப்பு கருதும். ஏன் தேசிய மக்கள் சக்தியும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவும் கூட அப்படித்தான் தவறாகக் கருதும் சூழல் உண்டு. தமிழ்த்தேசியத் தரப்புகள் உரிமை அரசியலில் இருந்து அபிவிருத்தி அரசியலுக்கு இறங்கி வந்துள்ளன. அப்படியே இந்த விடயத்தைக் கையாண்டு





விடலாம் என.

அப்படி அவர்கள் கருதினால் அது அவர்களுடைய தவறு மட்டுமல்ல, தென்னிலங்கையின் அணுகுமுறைத் தவறாகவே அமையும். இந்தக் கட்டுரை விவாதிப்பதைப்போல அபிவிருத்தியும் அரசியல் உரிமையும் சமாந்தரமானவை. இரண்டும் அடிப்படை உரிமைகளோடு தொடர்புடையவை, பின்னிப்பிணைந்தவை. இந்தப் புரிதலைத் தென்னிலங்கைத் தரப்புகள் கொள்ளத் தவறினால் நாடு தொடர்ந்தும் அமைதியின்மைக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும்தான் சிக்கித் தவிக்க நேரிடும்.

கஜேந்திரகுமார் இன்றுள்ள தமிழ்த் தேசிய அரசியலாளர்களின் மூத்த - அனுபவமுள்ள ஒருவராக உள்ளார். மூன்று தடவை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்) தலைவராக நீடித்து வருகிறார். இவற்றின் அடிப்படையில் அவர் தடுமாற்றங்களற்ற முறையில் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியற் போராட்டத்தை முன்னெடுப்பது அவசியமாகும்.

ஆனால் கஜேந்திரகுமாரிடம் தடுமாற்றமே - பதற்றமே - காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி தீர்வு யோசனையை முன்வைப்பதற்கு முன்பாக, அதற்கு நெருக்கடியைக் கொடுக்கும் - முட்டுக்கட்டையை ஏற்படுத்தும் - விதமாக அவசர அவசரமாக தானொரு தீர்வு யோசனையைத் தயார்ப்படுத்த முயற்சிக்கிறார்.

இதில் அவர் இரண்டு காய்களை வீழ்த்தலாம் என்று சிந்திப்பதாகத் தெரிகிறது. ஒன்று, சம்பந்தனின் மரணமும் நாடாளுமன்றத் தேர்தலில் சுமந்திரன் தோல்வியைச் சந்தித்திருப்பதும் தமிழரசுக் கட்சியில் உருவாக்கியுள்ள மென்னிலைத் தேசியவாதத்திற்கான இடத்தை அப்படியே இல்லாதொழித்து விடலாம். பதிலாகத் தன்னுடைய தீவிரத் தேசியவாதத்தைத் தமிழரசுக் கட்சிக்குள் புகுத்தி விடலாம். அல்லது தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டோடு தமிழரசுக் கட்சியையும் இழுத்து இணைத்து விடலாம் என்பது. இதற்காகவே அவர் அவசர அவசரமாகச் சிவஞானம் சிறிதரனைக் கூட்டுச் சேர்க்க முயற்சிக்கிறார்

ஆனால், கஜேந்திரகுமாரின் இந்த முயற்சியைச் சூழ்ச்சியாகக் கருதும் சுமந்திரன் தரப்பு இதை முறியடிப்பதற்காக, அரசியற் தீர்வைப் பற்றிப் பரிசீலிப்பதற்காக ஒரு அரசியற் குழுவை உருவாக்கியுள்ளது. அந்தக் குழுவின் யோசனை, பரிந்துரை, தீர்மானங்களின்படியே எதுவும் நடக்கும் என்று தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதனால் கஜேந்திரகுமாரின் நிகழ்ச்சிநிரல் குழம்பி, இடை நடுவில்நிற்கிறது. இதன்மூலம் தமிழரசுக் கட்சியை கஜேந்திரகுமார் இலகுவாக வளைக்க முடியாது என்பதைச் சுமந்திரன் தரப்பு காட்டியுள்ளது.

கஜேந்திரகுமாரின் இரண்டாவது முயற்சி, அபிவிருத்தி அரசியலில் தன்னுடைய கரிசனைகளைக் காட்டுவதும் அரசியற் தீர்வு முயற்சியில் தன்னுடைய செல்வாக்கை உயர்த்துவதுமாகும். அபிவிருத்தி அரசியலைப் பற்றிப் பேசுவதாக இருந்தால், அதற்கான அடிப்படைகளையும் அணுகுமுறைகளையும் கொள்ள வேண்டும். உரிய நிபுணத்துவ அறிவும் மக்களுடனான கள ஆய்வுகளும் அவசியமாகும். இதற்கு தனியே தனது கட்சி ஆதரவாளர்களுடன் நடத்தும் உரையாடல் மட்டும்போதாது. அதற்குமப்பால், விரிவான தளத்தில் சகல தரப்பினரோடும் பேசி, ஆராய்ந்து பிரச்சினைகளையும் தேவைகளையும் கண்டறிய வேண்டும். அவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்வதற்கான அணுகுமுறைகளையும் உபாயங்களையும் வகுக்க வேண்டும். இதற்கு கட்டமைப்பாக்கம் அவசியமாகும். அதைச் செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் வெறுமனே கூட்டங்களில் அறிக்கைகளைக் கையளிப்பதும் கம்புசுத்துவதும் பயனெதையும் தராது. தொடக்கத்தில் ஒரு மெல்லிய கவர்ச்சியான செய்தியையும் பரபரப்பையும் கொடுக்குமே தவிர, நல்விளைவுகளை உண்டாக்காது. நல்விளைவுகள் எதுவும் இல்லை என்றால், மக்களுக்கு திருப்தி ஏற்படாது. அவர்கள் வேறு திசைகளையே நோக்கிப் பயணிப்பர்.

அவ்வாறே அரசியற் தீர்வு விடயத்திலும் கஜேந்திரகுமார் (அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்) அவசரப்படுவதால் பயனில்லை. மட்டுமல்ல, தென்னிலங்கையிலுள்ள தீவிர சிங்கள தேசியவாதச் சக்திகளை உசார்ப்படுத்துவதற்கே இந்த அவசரம் உதவும். அது தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான விளைவுகளையே உருவாக்கும்.

ஆகவே அவசரப்பட்டு எதையும் செய்வதை விடுத்து, நிதானமாக - வரலாற்றின் பட்டறிவோடு சர்வதேசச் சூழல், பிராந்திய நிலவரம், உள்நாட்டுச் சூழல் ஆகியவற்றுக்கு அமையத் தன்னுடைய அரசியல் முன்னெடுப்புகளை அவர் செய்ய வேண்டும். காலம் அவரிடமிருந்து அதையே எதிர்பார்த்திருக்கிறது. விடுதலைப் புலிகளின் அரசியல் தொடர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கும் கஜேந்திரன்களுக்கு அவர்கள் கொண்டிருந்த அடிப்படையான விடயங்களைப் பற்றிய புரிதலற்றிருப்பது நகைப்பிற்குரியது. அரசியலில் கற்றுக் கொள்வதே பெற்றுக் கொள்வதற்கான அடிப்படையாகும். ஆகவே கஜேந்திரன்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும். அது அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியலும் பெற்றுக் கொள்ளக் கூடிய பலவற்றைக் கொண்டு வந்து கைகளில் சேர்க்கும். காலடியில் விடும்.



# டிரம்பின் காசாவை கைப்பற்றும் திட்டம் :
# அமெரிக்க மேலாதிக்கமா அல்லது டிரம்ப்பின் அடாவடித்தனமா?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

கனடா, மெக்சிக்கோ மேலான பொருளாதார வரி விதிப்பும், கிரின்லாந்து, பனாமா கால்வாயை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை மேற்குலகம் முன்வைத்துள்ளது.

அமெரிக்கா அதன் இராணுவ மற்றும் பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி பாலஸ்தீன தாயகத்தை அச்சுறுத்துவது நிச்சயமாக அரபுலகில் பலத்த கொந்தளிப்பை ஏற்படுத்தும்”

அமெரிக்காவின் வர்த்தக வரிகள், பொருளாதாரத் தடைகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களை கிழித்தெறியும் அச்சுறுத்தல்களால் மற்ற நாடுகளை கொடுமைப்படுத்துவது டிரம்ப் அரசின் தவறான அணுகுமுறை என்றே தோன்றுகிறது.

### டிரம்ப்பின் அடாவடித்தனம்!

ஏனெனில் அமெரிக்க நலன்களுக்கு எப்போதும் முக்கியத்துவம் அளிக்கும் ஐரோப்பிய நாடுகள், இந்த விவகாரத்தில் அமெரிக்காவைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன. குறிப்பாக கனடாவில் மிகப்பெரியளவில் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை ட்ரம்ப் அரசு தோற்றுவித்துள்ளது.

இவ்வாரம் அமெரிக்க அதிபரின் புதிய கருத்துக்கு உலகம் முழுவதிலும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. பாலஸ்தீனியர்களை அவர்களின் சொந்த நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கில் டிரம்ப் கூறிய விடயம் சர்வதேச அரங்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.அமெரிக்கா அதன் இராணுவ மற்றும் பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி பாலஸ்தீன தாயகத்தை அச்சுறுத்துவது நிச்சயமாக அரபுலகில் பலத்த கொந்தளிப்பை ஏற்படுத்தும்.

டிரம்ப் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக கனடா, மெக்சிக்கோ மேலான பொருளாதார வரி விதிப்பும், கிரீன்லாந்து, பனாமா கால்வாயை மீண்டும் கைப்பற்றும் முயற்சிகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை மேற்குலகம் முன்வைத்துள்ளது.

டிரம்ப் அரசின் இதுபோன்ற செயல் உண்மையில் அனைத்து நாடுகளுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தும். மேலும் சர்வதேச ஒழுங்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அபாயமும் உள்ளது. உலக நாடுகளின் பிரதிநிதியாகக் கூறப்படும் ஐக்கிய நாடுகள் சபை, உலக அமைதிக்காக, அத்தகைய நடவடிக்கைக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

### அமெரிக்க மேலாதிக்கம்?

இருப்பினும், அமெரிக்காவில் உள்ள செவ்விந்தியர்களை அவர்களின் பழங்குடி நிலங்களிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளனர் என்பதை நினைவில் கொள்வது முக்கியம் ஆகும்.

இதேவேளை ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், காசா பகுதியை அமெரிக்கா “கையகப்படுத்தும்” என்றும், பாலஸ்தீனியர்கள் நிரந்தரமாக அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கூறியது, எகிப்து மற்றும் ஜோர்டான் போன்ற நாடுகளில் 2.2 மில்லியன் மக்களை மீள்குடியேற்ற விரும்புவது, இஸ்ரேலிய அரசுக்கு மூலோபாய அடிப்படையில் வெற்றியின் அறிகுறியாகும்.

கடந்த 4/2/25 செவ்வாயன்று வெள்ளை மாளிகையில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது, காசாவில் உள்ள அனைத்து பாலஸ்தீனியர்களும் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்று டிரம்ப் கூறினார்.

காசா பகுதியை அமெரிக்கா ஆக்கிரமித்து கையகப்படுத்தும், மேலும் அதனுடன் நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்து, நாங்கள் அதை சொந்தமாக்கிக் கொள்வோம். மேலும் அந்த இடத்தில் உள்ள அனைத்து ஆபத்தான வெடிக்காத குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்களையும் அகற்றுவதற்கு பொறுப்பாவோம் என்றும் டிரம்ப் கூறினார்.

### காசா கட்டுப்பாடு அமெரிக்கா வசம்

டிரம்ப் மீண்டும் பதவியேற்ற பிறகு வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதல் வெளிநாட்டுத் தலைவர் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தான்.

போரினால் சிதைந்த காசா பகுதியின் உரிமையை அமெரிக்கா எடுத்துக் கொள்ளும் என்று நெதன்யாகுவுடன் இணைந்த கூட்டுச் சந்திப்பிலேயே அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறினார்.

காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றும், நாங்களே அதை சொந்தமாக்கிக் கொள்வோம். காசாவை அபிவிருத்தி செய்வதாகவும், சவுதி அரேபியா அங்கு உதவியாக இருக்கும் என்றும் டிரம்ப் உறுதியளித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் மீதான இஸ்ரேலிய இறையாண்மையை அங்கீகரிப்பது குறித்து வொஷிங்டன் எந்த நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை என்றும், ஆனால் அடுத்த மாதத்தில் இது தொடர்பில் ஒரு அறிவிப்பை வெளியிடும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் சவுதி அரேபியாவுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் என்று தான் நம்புவதாக அவர் கூறினார். இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான சமாதானம் சாத்தியமானது மட்டுமல்ல, அது நடக்கும் என்று நான் நினைக்கிறேன் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

பாலஸ்தீனியர்களை காசாவிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற முடியும் என்று டிரம்ப் கூறியதுடன், பாலஸ்தீன மக்கள் இப்போது காசாவில் வசிக்க முடியாது. அவர்களுக்கு வேறொரு இடம் தேவை. அது மக்களை மகிழ்விக்கும் இடமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் என்று டிரம்ப் மேலும் கூறியதை அடுத்து இஸ்லாமிய நாடுகள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

### காசாவிற்கு அமெரிக்க துருப்புக்கள் ?

காசாவிலிருந்து இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்களை எகிப்து, ஜோர்டான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாற்றுவது தொடர்பான திட்டத்தை டிரம்ப் முன்னர் முன்மொழிந்து இருந்தார். ஆனாலும் ஓமான் மற்றும் கெய்ரோ இரண்டும் இந்த திட்டத்தை நிராகரித்துள்ளன என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

காசாவிற்கு அமெரிக்கத் துருப்புக்களை அனுப்புவீர்களா என்று கேட்டதற்கு, டிரம்ப், தேவையானதைச் செய்வோம், ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கப் போகிறோம். இது மத்திய கிழக்கு மிகவும் பெருமைப்படும் திட்டங்களில் ஒன்றாகும் என்றார்.

ஆயினும் டிரம்பின் இந்தத்திட்டம் பல தசாப்த கால அமெரிக்கக் கொள்கையை முறியடித்து, அரபு உலகம் முழுவதும் சீற்றத்தைத் தூண்டும். அங்கு வொஷிங்டனின் நட்பு நாடுகள் பாலஸ்தீனியர்களை கட்டாயமாக இடம்பெயர்வதற்கு எதிராக நீண்ட காலமாக எச்சரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அகம், புறம், சங்க(ம)ம்

## நசைஇச் சென்ற என் நெஞ்சே...!

"கற்றது தமிழ்" படத்தில் பிரபாகர் வேடத்தில் நடித்திருக்கும் ஜீவா ,தனது சிறுவயதுத் தோழி மற்றும் மானசீகமாகக் காதலித்து வரும் ஆனந்தி (அஞ்சலி) வீட்டிற்கு சென்றிருக்கும்போது, அவர் ஜீவா குடிப்பதற்காக சுடுதண்ணீர் போட்டுத்தருவார். இந்த நிகழ்வை பலவருடம் கழித்து கருணாஸுக்கு எடுத்து சொல்லும்போது , "அவள் எதற்காக சுடு தண்ணீர் கொடுத்தாள் என்று புரிஞ்சுதா சார்?" என்று ஜீவா கேட்பார். அதற்கு கருணாஸ் "புரியலை " என்று மறுமொழி சொல்வார் . உடனே ஜீவா ,"உனது கல்யாணம் காதல் திருமணமா இல்லை பெற்றோர் பார்த்து நடத்திய திருமணமா?" என்று கேட்கும்பொழுது , " லவ் பண்ணா பொண்ணு கிடைக்கும் ஆனால் பொருள் கிடைக்காது " என்று சொல்லிவிட்டு தனக்கு வரதட்சிணையாக கிடைத்த பொருள்களை அடுக்கிக்கொண்டே போவார். அப்பொழுது ஜீவா இடைமறித்து " அதெல்லாம் கிடைக்கும் .ஆனால் சுடுதண்ணீர் கிடைக்குமா? " என்று கேட்பார். தமிழ்ப்படங்களில் காதலை வசனம் வசனமாக அடுக்கிக்கொண்டே போகாமல் ,பாட்டு பாடாமல் காலத்தால் அழியா அமரக் காதலை இவ்வளவு அழகாக ஒரு காட்சியில் சொல்லியிருப்பார் இயக்குனர் ராம்.

சங்கப்பாடல்களில் குறிப்பாக மொத்த அகநானுற்றில் உள்ள அனைத்து பாடல்களும் காதலைப் பற்றிய பாடல்கள் தான். எனினும் ,காதல் வயப்பட்ட நெஞ்சத்தை அழகாக இவ்வளவு நேர்த்தியாகச் சொல்லும் பாடல் இதுதான். தனது வேலையின் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்கிறான் தலைவன். அவள் நினைவை அவன் மனம் ஒருபோதும் மறக்கவே இல்லை. ஒருவாறாக தனது வேலை முடிந்து தலைவியைக் காண திரும்பிக் கொண்டிருக்கின்றான். அப்பொழுது தலைவன் தனது தேரினை ஓட்டும் பாகனிடம் தனது உள்ளக்கிடக்கையை எடுத்துச் சொல்லும் பாடல் இந்தப் பாடலாகும் .

**பாடியவர்:** கல்லாடனார்.

**திணை:** பாலை.

**துறை:** வினை முடித்து மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

கொல் வினைப் பொலிந்த, கூர்ங் குறும் புழுகின்,
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்பு நுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பை,
செப்பு அடர் அன்ன செங் குழை அகம்தோறு,
இழுதின் அன்ன தீம் புழல் துய்வாய்
உழுது காண் துளைய ஆகி, ஆர் கழல்பு,
ஆலி வானின் காலொடு பாறி,
துப்பின் அன்ன செங் கோட்டு இயவின்,
நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும்
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்

கொடு நுண் ஓதி மகளிர் ஓக்கிய
தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி,
நெடு மால் வரைய குடிஞையோடு இரட்டும்
குன்று பின் ஒழியப் போகி, உரம் துரந்து,

ஞாயிறு படினும், "ஊர் சேய்த்து" எனாது,
துனை பரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும், விரைந்து வல் எய்தி, பல் மாண்
ஓங்கிய நல் இல் ஒரு சிறை நிலைஇ,
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி,
கன்று புகு மாலை நின்றோள் எய்தி,

கை கவியாச் சென்று, கண் புதையாக் குறுகி,
பிடிக் கை அன்ன பின்னகம் தீண்டி,
தொடிக் கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின், வாள் நுதல்,
அம் தீம் கிளவிக் குறுமகள்
மென் தோள் பெற நசைஇச் சென்ற என் நெஞ்சே?

**விளக்கம்:** கொல்லும் தொழிலிலே சிறந்ததும், கூர்மை யான குறும் புழுகு எனப் பெயரியதும், வில்வீரர்களின் அம்பறாத் தூணிகளிலே மிகுதியாகப் பெய்திருக்கப் படுவதுமாகிய, குப்பி முனைகளைப் போன்று, இருப்பை மரத்திலே இருப்பை மொட்டுகள் அரும்பியிருக்கின்றன. செப்புத் தகடுகள்போன்ற அதன் சிவந்த தளிர்களுக்கு உட்புறத்தெல்லாம் , நெய்போன்ற நிறமுடைய, இனிய துளையுள்ள பூக்கள் பூத்திருக்கின்றன. அவை, தமது ஆர்க்கு கள் கழன்று, காம்பினை நீக்கிக், காணக்கூடிய துளையினை உடையவாக, வானிலிருந்து பெய்யும் பனிக் கட்டிகளைப் போலக், காற்றாற் சிதறுண்டு தரையிலே வீழ்ந்தன. பவளம் போன்ற சிவந்த மேட்டுப்புறங்களிலே விழுந்து கிடக்கும் அப்பூக்கள், சிவப்பு நிறத்தின்மீது வெண்ணிறக் கொழுப்பு படர்ந்திருப்பதைப் போல காட்சியளிக்கும். பாலை நிலத்திலேயுள்ள, அழகிய குடிமக்களை உடைய, அத்தகைய சிற்றூர் நமது ஊராகும்.



மென்மையான சுருண்டு சுருண்டு விளங்குகின்ற கூந்தல் உடையவர்கள் அங்கே வாழும் மகளிர். அவர், பூண் கட்டிய வலிமையான உலக்கைகளை உயர்த்தி தினையினை இடிப்பர். அப்போது, உரலின்கண் நின்றெழுகின்ற அவர்க ளின் உலக்கையொலியானது, நெடிய பெரிய மலைச்சார லினின்றும் எழுகின்ற ஆந்தைகளின் ஒலியோடு கலந்து, ஒலியும் எதிரொலியும் போலே மாறிமாறி ஒலித்துக் கொண்டிருக்கும். பல்வேறு குன்றுகளை கடந்து செல்கின் றோம் நீயோ தேரினை விரை வாகச் செலுத்துகின்றாய் ஞாயிறா னது மறைந்தபோதும், 'ஊர் தொலைவிலேயுள்ளதே எனக் கருதித் தேரினை நிறுத்தவும் எண்ணாது, ஏற்கனவே விரைந்து செல்லும் குதிரைகளை, மேலும் விரையச் செல்லுமாறு, முடுக்கி ஓட்டுகின்றாய் . இவ்வாறு சிறிதும் ஓய்வெடுக்காது வீடுநோக்கிப் போகின்றோம் நாம். பல கட்டுக் களால் அமைந்த பல்வேறு சிறப்புகளை உடையது எமது நல்ல இல்லம். அந்த வீட்டில் ஒருபுறத்தே நிலையாக நின்று, மற்றொரு பக்கத்தில் இருந்து ஒலிக்கும் பல்லியானது ஒலியை கேட்டுக்கொண்டே, கன்றுகள் வீடு திரும்புகின்ற மாலை வேளையிலே, எம் வரவுபார்த்து நிற்பவள் எம் தலைவி. நாணொடு செறிந்த கற்பினை உடையவள் ஒளிருகின்ற நெற்றியினை உடையவள் அழகியதான இனிய சொல்லினை உடையவள் இளமைப் பருவத்தையும் உடையவள் அவள். அவளை அடைந்து, கைகளைக் கவித்துச் சென்று, அவளை நெருங்கி, அவள் கண்களைப் புதைத்து, பிடியானையின் துதிக்கை போன்ற அவளுடைய பின்னலிட்டுத் தொங்கும் கூந்தலைத் தீண்டி, அவளது தொடியணிந்த கைகள் பொருந்த, மென்மையான தோள்களை அடைவதற்கு விருப்பமுற்று, எமக்கு முன்னாகவே விரைந்துசென்ற எம் நெஞ்சமானது, அவ ளைத் தானும் சென்று தழுவியது உனக்கு தெரியுமா ?



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

காதல் என்பது என்ன? "காதல் என்பது இயற்கை தரும் போதை!" என் கிறார் அந்தொனி வால்ஷ். விஞ்ஞா னம் என்ன சொல்கிற தென்றால் 'இயற்கை யானது நம் ஒவ்வொரு வரையும் ஒவ்வொரு வகையான மனிதருக்கு மட்டும் தயார் செய்து வைத்திருக்கிறதாம். உங்கள் ஒவ்வொருவர் ஆழ்மனத்திலும் உங்க ளுக்கு மட்டுமே பிடித்த மான நாயகன் மற்றும் நாயகி இருக்கிறார்கள். இந்த நாயக அல்லது நாயகி பிம்பம் உங்கள் இளமைக் காலத்தில் உங்கள் மனதில் உருவாகிறது. அந்த முகத்தைச் நீங்கள் எங்காவது சந்திக்கும்போது அதே நொடியில் காதல் வயப்படுகிறீர்கள்" . ஆதலால் உங்களுக்கு யாரையாவது பார்த்த உடன் காதல் உணர்ச்சி பொங்கினால் ,பதற்றப்பட வேண்டாம். நீங்கள் இளைமையில் உங்கள் மனதில் உருவகித்து கொண்டாடிய நபரை பார்த்திருக்கிறீர்கள். அவ்வளவு தான்.

32 YEARS OF SERVICE
மெல்பேர்னில் உங்கள் அபிமான வானொலி சேவை
சங்கநாதம்
3MDR 97.1FM
3MDR 97.1 fm mountain district radio
பிரதி ஞாயிறுதோறும் காலை 8 மணிமுதல் 10 மணிவரை கேட்டு மகிழலாம்
SANGANATHAM TAMIL COMMUNITY BROADCAST FM 97.1 ON SUNDAY 8AM TO 10AM
WEB www.sanganatham.net.au
sanganatham@gmail.com
vtca sanganatham

# கூட்டாட்சித் தேர்தலை ஆக்கிரமிக்கும் "அணுசக்தி"!

ஆஸ்திரேலியாவில் 25 வருடங்களுக்கு மேலாக 'அணுசக்தித் தடை' அமுலில் உள்ள நிலையில், எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள கூட்டாட்சித் தேர்தலில் அணுசக்தி விவகாரம் பேசுபொருளாக மாற உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் தலைமையிலான கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றினால், ஆஸ்திரேலியா முழுவதும் ஏழு அணுசக்தி உலைகளை நிர்மாணிக்கும் திட்டம் உள்ளது எனக் கூறப்படுகின்றது.

எனினும், இவ்வாறான அணு உலைகளுக்கு கூட்டாட்சி மட்டத்தில் தடை உள்ளது. எனவே, கூட்டணியின் திட்டத்தை செயற்படுத்த வேண்டிவரின் சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

1986 இல் ஏற்பட்ட செர்னோபில் பேரழிவுக்கு பிறகு அணுசக்தி குறித்த பொதுமக்களின் கருத்தில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டது.

அந்த மாற்றம் 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் அணுசக்திக்கு எதிரான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முக்கியமான பங்கு வகித்துள்ளது.



# கூட்டாட்சித் தேர்தலுக்காக மாநில எம்.பி. பதவி துறப்பு



எதிர்வரும் கூட்டாட்சித் தேர்தலில் களமிறங்குவதற்காக டாஸ்மேனிய மாநில நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை, லேபர் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவரான ரெபேக்கா வைட் இராஜினாமா செய்யவுள்ளார்.

2017 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை டாஸ்மேனிய மாநிலத்தில் லேபர் கட்சியை இவர் வழிநடத்தியுள்ளார்.

கூட்டாட்சித் தேர்தலில் லியோன்ஸ் தொகுதியிலேயே ரெபேக்கா வைட் போட்டியிடவுள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பிவைக்கவுள்ளதாக ரெபேக்கா வைட் தெரிவித்துள்ளார். கூட்டாட்சித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அவர் அதிகாரபூர்வமாக பதவி விலகுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பூர்வகுடிகளின் கொடிகளுக்கு எதிராக போர்க்கொடி!



பூர்வகுடி மக்கள் பயன்படுத்தும் கொடிகள் ஆஸ்திரேலியாவின் தேசியக் கொடி அல்ல என எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தான் பிரதமரானால் பூர்வகுடி மக்களின் கொடி மற்றும் டோரஸ் தீவு கொடி என்பவற்றின் முன்னால் நிற்கப்போவதில்லை என்ற முடிவில் உறுதியாக இருப்பதாகவும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலிய தினத்தன்று ஒரு கொடி மாத்திரமே இருக்க வேண்டும் எனவும், பலகொடிகள் ஆஸ்திரேலியர்களை பிளவுபடுத்துகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் தேசியப் பெருமையை புதுப்பிக்க விரும்புவதாகவும், அதற்காக ஒரே கொடி விவாதத்தை முன்னெடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பூர்வகுடி மக்களின் கொடிகள்மீது தனக்கு நிறைய மதிப்பு உள்ளதாகவும், ஆனால் அவை நாட்டின் தேசியக் கொடி அல்லவெனவும் அவர் கூறியுள்ளார்.

# 'டீப்சீக்' செயலிக்கு ஆஸ்திரேலியாவில் தடை!

சீனா உருவாக்கியுள்ள டீப்சீக் ஏஐ செயலிக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இதற்கமைய அரச தொடர்பாடல் சாதனங்களில் மேற்படி செயலியை பயன்படுத்த முடியாது என்பதுடன், தரவிறக்கம் செய்யப்பட்டிருப்பின் அவற்றை அகற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டீப்சீக் செயலி ஆஸ்திரேலிய அரசாங்க தொழில்நுட்பத்தில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எந்தத் தொழில்நுட்பமாக இருந்தாலும் தேசிய பாதுகாப்புக்கு முன்னிலை வழங்கியே நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் டோனி பர்க் தெரிவித்துள்ளார்.

டீப்சீக் செயலி சீன அரசாங்கத்தின் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது என




ஆஸ்திரேலிய சைபர் பாதுகாப்பு நிறுவனம் சுட்டிக்காட்டி இருந்த நிலையிலேயே, இந்தத் தடை அமுலுக்கு வந்துள்ளது.

இந்தத்தடை அரசாங்க நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றபோதிலும் தனியார் துறையினரும் 'டீப்சீக்' செயலி பயன்பாடு பற்றி விழிப்பாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



# பூர்வகுடி மக்களுக்காக 842.5 மில்லியன் டொலர் ஒதுக்கீடு!

Northern Territoryயில் பூர்வகுடி மக்களுக்காக 842.6 மில்லியன் டொலர் நிதி உதவியை கூட்டாட்சி அரசாங்கம் அறிவித்துள்ளது. அடுத்த ஆறு ஆண்டுகாலப்பகுதிக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

பூர்வக்குடி மக்கள் செறிந்துவாழும் ஆலிஸ் ஸ்பிரிங்ஸில் வைத்து இது தொடர்பான அறிவிப்பை பிரதமர் அந்தோனீ அல்பானீஸி வெளியிட்டுள்ளார்.

பூர்வகுடி மக்களுக்கும், பூர்வகுடி அல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளியை குறைப்பதற்கு ஆஸ்திரேலியர்கள் விரும்புகின்றார்கள் எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

அத்துடன், பூர்வகுடி மக்களுடன் இணைந்து பணியாற்ற கூட்டாட்சி அரசு உறுதிபூண்டுள்ளது என பூர்வகுடி மக்களுக்கான அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கான இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேற்படி நிதி உதவி பொலிஸ், பெண்கள் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகள் உட்பட சமூக மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

"அனைத்து ஆஸ்திரேலியர்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்கும் எதிர்காலத்தை உருவாக்குவதே தமது முதன்மை பணி" எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போக்குவரத்து அமைச்சர் இராஜினாமா!



நியூ சவுத் வேல்ஸ் மாநில போக்குவரத்து அமைச்சர் ஜோ ஹெலன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அமைச்சுக்குரிய வாகனச் சாரதியை தனது பிரத்தியேக பயணங்களுக்கு பயன்படுத்திய விவகாரம் தொடர்பில் எழுந்த சர்ச்சையையடுத்தே அவர் இவ்வாறு பதவி விலகியுள்ளார்.

தனது குழந்தை பயணிப்பதற்கும், வேறு இடங்களுக்கு செல்வதற்கும் இவர் சாரதியைப் பயன்படுத்தியுள்ளார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அவர் அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளார். எனினும், அரசியலில் இருந்து அவர் ஓய்வுபெறவில்லை.

தனது செயலுக்காக மக்களிடம் வருத்தம் வெளியிட்டுள்ள அவர், போக்குவரத்துக்குரிய கட்டணங்கள் மீளச் செலுத்தப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

# மாதராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்கள் இந்த மாதம் விவேகத்தோடு நடந்து கொள்வீர்கள். எந்த இடத்திலும் சுயமரியாதையையும், சுய கௌரவத்தையும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகமாக இருக்கும். எந்த ஒரு முடிவை எடுப்பதாக இருந்தாலும், குழப்பம் இருக்காது. வேலையிலும் வியாபாரத்திலும் நல்ல முன்னேற்றம் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் இரட்டிப்பாகும். திங்கட்கிழமையில் விநாயகர் வழிபாடு செய்வது நன்மையை தரும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் சுறுசுறுப்பு இருக்கும். அடுத்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். எந்த ஒரு விஷயத்தையும் எதிர்மறையாகச் சிந்திக்கவே மாட்டீர்கள். உங்களுக்கு சாதகமாக உங்களுடைய எண்ணங்களும், பேச்சும் சிந்தனையும் அமையும். குடும்பம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் செலவுகள் கொஞ்சம் அதிகரிக்கும். தேவையற்ற பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். வெள்ளிக்கிழமை அம்மன் வழிபாடு உங்கள் நிதி நிலைமையைச் சீர் செய்யும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் சந்தோஷம் நிறைந்த மாதமாக இருக்கும். வேலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். வியாபாரத்தை பொறுத்தவரை இருந்து வந்த பிரச்சினைகள் எல்லாம் படிப்படியாகக் குறைய தொடங்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். கணவன் மனைவிக்குள் இருந்து வந்த வாக்குவாதம் நீங்கி குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். செவ்வாய்க்கிழமை துர்க்கை வழிபாடு உங்களுக்கு நன்மையைச் செய்யும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் மன நிம்மதியான மாதமாக இருக்கும். நிதி நிலைமை சீராக இருக்கும். வாங்கிய கடனை திருப்பி அடைக்க நல்ல நேரம் காலம் பிறந்து விடும். வேலையில் திறமைகள் வெளிப்படும். எதிரிகள் முன்பு கொஞ்சம் கவனமாக செயற்படவும். எதிரிகளைக் குறைத்து எடை போட வேண்டாம். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாடு நன்மையைத் தரும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கொஞ்சம் சோதனைகள் நிறைந்த மாதமாகத் தான் இருக்கும். உங்களுடைய நேர்மையை அந்தக் கடவுள் சோதிப்பான். நண்பர்கள் உறவுகள் யாராவது உங்களுடைய மனதைக் கலைப்பதற்கு போராடுவார்கள். உங்களை குறுக்கு வழியில் அழைத்துச் செல்ல திட்டம் தீட்டுவார்கள். ஆனால் அதற்கெல்லாம் நீங்கள் துணை போகக்கூடாது. குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கக்கூடாது.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இதுநாள் வரை இருந்து வந்த பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கிடைக்கும். நல்ல வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்டிருந்தவர்களுக்கு, கையில் பணம் இல்லாமல் தவித்து வந்தவர்களுக்கு எல்லாம் இனி வரக்கூடிய காலகட்டத்தில் நிச்சயம் வசந்தம் வீசும். திருமணமாகாமல் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. கூடிய சீக்கிரம் திருமணமானவர்களுக்கு குழந்தை பாக்கியமும் கிடைக்கும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் ரொம்ப பிசியான மாதமாக இருக்கப் போகிறது. அடுத்தடுத்த வேலைகள் தொடர்ச்சியாக வந்து கொண்டே இருக்கும். ஆசிரியர் தொழிலில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் நிறைய நல்ல விஷயங்கள் நடக்கும். உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். பாராட்டுகளும் புகழும் கிடைக்கும். வியாபாரத்தில் கூடுதல் கவனத்தோடு இருக்க வேண்டும். பண பரிவர்த்தனையில் கவனம் இருக்கும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக் காரர்களுக்கு இந்த மாதம் சந்தோஷம் நிறைந்த மாதமாக இருக்கும். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி அடைவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலத்துக்குத் தேவையான சேமிப்பை உயர்த்துவீர்கள். காதல் கைகூடும். திருமணம் வரை செல்லும். வேலையிலும் வியாபாரத்திலும் நன்மையே நடக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலபேருக்கு பதவி, சம்பள உயர்வு கிடைக்கும் வாய்ப்புகள் இருக்கிறது.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தேவையற்ற சிந்தனைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. நீங்கள் எக்காரணத்தைக் கொண்டும் நேரத்தை வீணடிக்க கூடாது. சொன்ன வேலையை சொன்ன நேரத்தில் முடித்துக் கொடுப்பதில் மட்டும் முதலில் அக்கறையாக இருக்க வேண்டும். நண்பர்கள் உறவுகள் பொழுதுபோக்கு, வீண் செலவு என்று எந்தவிதமான விஷயங்களிலும் நீங்கள் தலையிடக்கூடாது. இந்த மாதம் உங்களுக்கு கூடுதல் பொறுப்பு தேவை.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கொஞ்சம் கூடுதல் பொறுப்புகள் இருக்கும். கூடுதல் செலவுகள் இருக்கும். வெளியூர்ப் பயணங்கள் மூலம் கொஞ்சம் அலைச்சல் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். நல்ல லாபமும் கிடைக்கும். எல்லாம் நல்லபடியாக நடந்தாலும் இறுதியில் திருஷ்டிப்பொட்டு வைத்தது போல ஒரு கஷ்டம் வரும். அதற்காக பயந்து விடக்கூடாது. கஷ்டத்தை எதிர்கொள்ள துணிச்சலோடு நடந்து கொள்ளுங்கள்.

## கும்பம்

கும்ப ராசியைப் பொறுத்தவரை இந்த மாதம் ஏற்ற இறக்கத்தோடு இருக்கும். வேலையில் அக்கறையோடு நடந்து கொள்ளுங்கள். நாளை செய்யலாம் என்ற வார்த்தையை சொல்லக் கூடாது. அன்றைக்கான வேலையை அன்றே செய்து விட வேண்டும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். செலவைக் குறைத்துக் கொள்ளுங்கள். கணவன் மனைவி ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து நடக்க வேண்டும். வாக்குவாதம் செய்யக்கூடாது.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் லட்சியம் நிறைவேறக் கூடிய மாதமாக இருக்கும். கடந்து வந்த பிரச்சினைகளை எல்லாம் முடிப்பதற்கு கடவுள் உங்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்க போகின்றார். நிதிநிலைமை சீராகும். வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு தேவையான அத்தனை முயற்சிகளும் மேற்கொள்வீர்கள். மன நிம்மதி கிடைக்கும். எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறி விடலாம் என்ற திருப்தியும் இருக்கும். வியாபாரத்திலும் நல்ல முன்னேற்றம் இருக்கும்.



தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

Transco™ CARGO




# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

*We love to deliver*

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU